Regd. No. M. 4900. 16 பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0.

# குடி அரசு

ESTD. 1924

எல்லாவித
அச்சு வேலைகளும்
சிறந்த முறையில்
செய்து தரப்படும்.
★
தமிழன் பிரஸ், ஈரோடு.

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 ஈரோடு 31-1-1948 சனிக்கிழமை மலர் 21.

★

## 1948 FEBRUARY. 1948

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | | | | | | |

★

கற்பனை :

# அங்கேயும் கல்த்தா!

[துறையூர் நாராயணன்]

திடீரென்று ஒருநாள் எல்லாத்தேவர்களுக்கும் இந்திரனிடமிருந்து அபாய அறிவிப்பு அழைப்புச் சீட்டு வந்திருந்தது. அபாய அறிவிப்பு அழைப்புச் சீட்டைக் கண்ட தேவர்கள் காரணம் புரியாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு மிரள மிரள விழித்தார்

* *

மறுநாள் இந்திரசபை ஆரம்பமாயிற்று. முப்பத்துமுக்கோடி தேவர்களும், நாற்பத்து எண்ணாயிரம் ரிஷிகளும் வரிசை வரிசையாக உட்கார்ந்திருந்தனர்.

அவசரமாக ஆரம்பிக்கப்பட்ட அன்றைய இந்திரசபையிலே ஆடலழகிகளின் சதங்கைஒலியில்லை. அவர்களின் ஆட்டத்தினால் ஏற்படும் 'கிண்கிணி' ஒலியும் 'சலீர் சலீர்' எனக்கேட்கும் சிலம்பொலியும் இல்லை. சதா இன்னிசை வர்ஷித்துக் கொண்டிருக்கும் இசைக் கருவிகள் எங்கேயோ ஒரு மூலையில் கிடந்தன. நாட்டிய அழகிகளின் உடல் அழகையும், அந்த உடலுக்கு ஏற்றாற்போல் பருத்துப்புரண்டு கிடக்கும்களிரசக் கொங்கைகளையும், அதனைத் தாங்கமாட்டாமல் தவிக்கும் இடையையும், அந்த இடையிலேயே மின்னும் அணிகளின் ஒளியையும், அந்த ஒளியையும் கூசச் செய்யும் கெண்டை விழிக் கண்களையும், அந்தக் கண்களிலே மிளிரும் காம உணர்ச்சியையும், அந்த உணர்ச்சியை மற்றவர்களுக்கும் தூண்டிவிடும்படியான இடை ஒடிப்பும், நடை அலங்காரமும், விரல்களின் நர்த்தனமும் இந்த ஆட்டத்திற்கு ஏற்ற காமப்பாட்டையும், அந்தப் பாட்டோடு ஓடிவரும் இசைக் கருவிகளின் இன்னிசையையும் கண்டு கேட்டு, பார்த்து மெய்மறந்து இவைகளெல்லாம் தூண்டிவிடும் காம உணர்ச்சியைவிட, அதிகமாகத் தூண்டி விடும் சோமரசக் கள்ளையும் அருந்தி, பரவசமடைந்து கிடக்கும் தேவர்கள் முகத்திலே அன்று மகிழ்ச்சியில்லை. முடிவாகச் சொல்லவேண்டுமானால் அன்றைய இந்திர சபையிலே வழக்கத்திற்கு விரோதமாக நிசப்தம் நிலவியது. எங்கும் சோகத்தின் சாயல் படர்ந்திருந்தது. சிந்தனையே உருவாக அமர்ந்திருந்தான் இந்திரன். அவனுக்கு வலது பக்கத்திலே உட்கார்ந்திருந்த நாரதர் ஒடிந்துபோன தன் தம்புராவின் கம்பியை ரிப்பேர் செய்து கொண்டிருந்தார்! வெகுதூரத்திலே ஒரு மூலையில் உட்கார்ந்திருந்த் ரம்பையும், ஊர்வசியும் தங்கள் கால் சதங்கைகளைப் பொழுது போக்குக்காக எண்ணிக்கொண்டிருந்தனர். 'முனிவர்' என்ற பட்டம் பெற்ற தாடிக் கிழவர் ஒருவர், தான் இருந்த இடத்திலே உட்கார்ந்திருந்தபடியே தூங்கி விழுந்து கொண்டிருந்தார். அவர் விடும் கொறட்டைச் சத்தத்தைக் கேட்டு வெறுப்படைந்த தேவர் ஒருவர் 'இந்திரசபையிலே தூங்கலாமா? தூங்கக்கூடாதா?' என்ற கேள்வியைக் கேட்கலாமா? வேண்டாமா? என்று யோஜித்துக் கொண்டிருந்தார்.

மௌனத்தின் எல்லையிலிருந்து மீண்ட தேவேந்திரன் பேச ஆரம்பித்தான்.

"நாரதரே! எதற்காக இவ்வளவு அவசரமாக இந்தச்சபையைக்கூட்டச் சொன்னீர்? அப்படி என்ன ஆபத்து நமக்குப் புதிதாக வரப்போகிறது" என்று கேட்டான் இந்திரன்.

ரிப்பேர் செய்து கொண்டிருந்த வேலையை விட்டு விட்டு எழுந்து பேச ஆரம்பித்த நாரதர் எதிரே ஒரு தேவர் அணிந்திருந்த கருப்புத் துணியைப் பார்த்துப் பயந்து நடுநடுங்கிக் கையும் வராமல் காலும் வராமல் குய்யோ முறையோ என்று கத்திக் கொண்டே ஓடிப்போய் இந்திரன் பக்கத்திலே கைகால்கள் வெடவெட வென நடுங்க நின்று கொண்டு,

"தேவேந்திரா! போச்சு! தேவர்கள் பரம்பரையே போச்சு! பூண்டோடு அழியப்போகிறது! இந்திர லோகம் மட்டுமல்ல தேவலோகமே சர்வ நாசம் அடையப்போகிறது. பூலோகத்தைக் கெடுத்துக்கொண்டு வருவது போதாது என்று இந்தக் கருஞ்சட்டைக்காரர்கள் நம் தெய்வலோகத்திற்கும் வந்து விட்டார்கள்! நம்மிடையே உள்ள விபீஷண ஆழ்வார்கள் சிலர் நம்மையே காட்டிக்கொடுக்கவும் துணிந்துவிட்டார்கள்................."

என்றுகூறி முடிப்பதற்குள் எங்கேயோ இருந்த ஒரு புஷ்பத்தொட்டி 'விர்' ரென்று மேலே பறந்து வந்து நாரதரின் தலையில் விழப்போனது கொஞ்சம் தவறி அவரின் தம்புராவில் விழுந்து அதைத் தூள் தூளாக்கியது.

இந்த எதிர்பாராத தாக்கலினால் திக்பிரமை அடைந்த நாரதர் இந்த திடீர் தாக்குதலை ஏற்படுத்தியது யாராயிருக்கக்கூடும என்று யோசிப்பதற்குள் எதிரே இருக்கும் விபீஷண ஆழ்வாரின் இடம் காலியாயிருப்பதையும், அவர், "நன்றி கெட்ட பயல்கள், காரியம் ஆகவேண்டுமென்றால் காலைப் பிடிப்பது, காரியம் ஆனதும் கழுத்தைப் பிடிப்பது! தேவர்களின் தொழிலே அது தானே! இது தெரியாமல் பதவிக்காக ஆசைப்பட்டு என் இனத்தையே காட்டிக்கொடுத்து ஏமாந்தேன். நான் இல்லையென்றால் இந்தப்பயல்களின் ஆட்சி என் அண்ணன் இராவணனால் அன்றே அஸ்தமித்திருக்காதா! காட்டிக் கொடுக்கும் தொழிலுக்கு என்னையே ஒப்பிடுகிறான், சவுண்டிப்பயல்" என்று தூற்றிக்கொண்டே இந்திர சபையை விட்டு வெளியேறிக் கொண்டிருப்பதையும் கண்டார்.

சரிதான், புஷ்பத்தொட்டியின்கைங்கரியம் 'அய்யா நடத்தியது தான்' என்பதைப் புரிந்துகொள்ள வெகு நேரம் செல்லவில்லை திரிலோக சஞ்சாரிக்கு.

அய்ந்து நிமிடத்தில் நடந்த இந்தச் சிறு சம்பவத்தைக் கண்டு திகைத்துப் போய் மெய்மறந்து இருந்த இந்திரன்,

"நாரதரே! இவைகளெல்லாம் என்ன? ஒன்றுமே புரிய வில்லையே. என்னமோ சொன்னீர், உடனே விபீஷணர் எழுந்து போய்விட்டார், கருஞ்சட்டையினர் என்று கூறுகிறீர்; தெய்வலோகமே அழியப்போகிறது என்று கூறுகிறீர்; நம்மிடையே காட்டிக் கொடுக்கும் கயவர்கள் பெருகிவிட்டனர் என்று கூறுகிறீர். விஷயம் என்ன? விளக்கமாகக் கூறும்"

"தேவேந்திரா! ஆமாம், உனக்கு எங்கே விஷயம் விளங்கப்போகிறது. மதுவும் மங்கையும் உன் மனதை ஆட்கொண்டிருக்கும்போது இவைகளெல்லாம் புரியுமா? நாளைக் கருஞ்சட்டையினர் வந்து 'இறங்கு ஆட்சி பீடத்தை விட்டு' என்று கழுத்திலே கையைக் கொடுத்துத் தள்ளும்போது பேசாமல் முடியைக் கழற்றிக்கொடுத்துவிட்டுக் கானகம் சென்று விடுவாய். கஷ்டப் படுவது நாங்களல்லவா? அந்தக்

(தொடர்ச்சி 14-ம் பக்கம்)

**ஒருவன் உழைப்பை ஒருவன் உறிஞ்சாத**

# நடிப்புக்கலை எதற்கு?

★

சோவியத் ருஷியாவின் தலைநகரமாகிய மாஸ்கோவில் நூற்றுக் கணக்கான நாடக மண்டபங்களும், படக்காட்சி மண்டபங்களுமிருக்கின்றன. இவற்றில் பெரும்பாலானவை புரட்சிக்குப் பின்னர் தோன்றியவையாகும். புரட்சி ஏற்படுவதற்கு முன்னர் மன்னர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், பிரபுக்களுமே படக்காட்சி மண்டபங்களுக்கும், நாடக மண்டபங்களுக்கும், விஜயம் செய்து கொண்டிருந்தனர். ஆனால் தற்பொழுது குடியானவர்களும், ஏழை மக்களுமே தியேட்டர்களுக்குச் செல்கின்றனர். தியேட்டர்கள் என்பது ஒருங்கே படக்காட்சி நாடக மண்டபங்களைக் குறிக்கும்.

### சினிமா செல்லல் தினசரிக் கடன்.

தியேட்டர்களுக்குச் செல்வதை ஆடம்பரமாகக் கருதலாம். மற்றும் சிலர் பொழுது போக்கின் நிமித்தம் தியேட்டர்களுக்கு விஜயம் செய்யலாம். ஆனால் மாஸ்கோ ஜனங்கள் தியேட்டர்களுக்குச் செல்வதைத் தங்களுடைய முக்கியமான கடமையாகக் கருதுகின்றனர். சோவியத் அதிகாரிகளும், அறிஞர்களும் தியேட்டர்களுக்குச் செல்ல வேண்டிய அவசியத்தைத் தீவிரமாகப் பிரசாரம் செய்து வருகின்றனர். "தியேட்டர்களுக்குச் செல்வதால் உங்களுடைய அறிவு வளர்ச்சியடையும். இதர தேசங்களில் வாழும் ஜனங்களுடைய பழக்க வழக்கங்களை அறிந்து கொள்ளலாம். ஆதலால் தியேட்டர்களுக்குச் செல்ல வேண்டிய வழக்கம் உங்களில் ஒவ்வொருவருக்கும் ஏற்படவேண்டும் என்று சோவியத் அறிஞர்கள் வீதிகளிலும், மைதானங்களிலும் பிரசாரம் செய்வதை நாம் பார்க்கலாம். ஒவ்வொரு நாள் மாலையிலும் மாஸ்கோ நகரிலுள்ள தியேட்டர்கள் பல வர்ணங்களுள்ள மின்சார விளக்குகளில் ஜோதி மயமாகப் பிரகாசிக்கின்றன. அவையாவும் மின்சார விளக்குகளாலேயே கதைகளைப் பற்றிய விபரங்களை விளம்பரம் செய்கின்றன. இலக்கிய சம்பந்தப்பட்ட கதைகளும், தினசரி வாழ்க்கை சம்பந்தப்பட்ட கதைகளும், மாஸ்கோ தியேட்டர்களில் காண்பிக்கப்படுகின்றன. சோகம், ஹாஸ்யம், கோபம் முதலிய நவரசங்களும் பொருந்திய கதைகள் தினம்தோறும் மாஸ்கோ தியேட்டர்களில் காண்பிக்கப்படுகின்றன. இதர நாடுகளில் விடுமுறை தினங்களிலேயே தியேட்டர்களில் கூட்டத்தைப் பார்க்கலாம். ஆனால் மாஸ்கோ நகரிலுள்ள தியேட்டர்களில் தினம் கூட்டமாகவே இருக்கிறது. மாஸ்கோ ஜனங்கள் ஒவ்வொருவரின் பிரியத்திற்குத் தகுந்த கதைகள் தியேட்டர்களில் காண்பிக்கப்படுகின்றன. குடியானவர்கள், அதிகாரிகள், தொழிலாளர்கள் முதலியவர்களனைவரும் சரிசமமான ஆசனங்களிலேயே அமர்கின்றனர். ஆகவே மாஸ்கோ நகரத்தில் சகல ஜனங்களும் தியேட்டர்களுக்கு விஜயம் செய்ய வசதிகளைப் பெறுகின்றனர்.

### தினசரி வாழ்வின் திருத்தத்திற்கும் சினிமா.

புரட்சி ஏற்படுவதற்கு முன்னர் மாஸ்கோ நகரத்திலிருந்த தியேட்டர்களின் தனிப்பட்ட சொந்தக்காரர்கள் சொந்த லாபத்தைக்கருதியே நாடகங்களையும், சினிமாக்களையும் நடத்திக் கொண்டிருந்தனர். ஆனால் தற்பொழுது மாஸ்கோ நகரத்திலுள்ள தியேட்டர்களின் சொந்தக்காரர்கள் பொது ஜனங்களை உற்சாகப்படுத்தக் கூடிய சினிமாக் கதைகளையும், நாடகங்களையுமே காண்பிக்கின்றனர். எத்தகைய கதைகளும் அவர்களுடைய தியேட்டர்களுக்குச் சென்றதும் புதிய சுவையையும், அழகையும் பெறுகின்றன. தினசரி வாழ்க்கையை ஒழுங்கு படுத்திக் கொள்வதற்குத் தகுந்த பாடங்களடங்கியகதைகளும் தியேட்டர்களில் காண்பிக்கப்படுகின்றன. மாஸ்கோ பிரஜைகள் ஒவ்வொருநாள் மாலையிலும் தங்களுடைய வேலை முடிந்த பின்னர் தியேட்டர்களுக்குச் செல்கின்றனர். அவர்கள் பணத்தைப் பற்றியேனும் தேகத்தைப் பற்றியேனும் கவலைப்படுவதில்லை. சோவியத் சர்க்கார் ஆயுள் முழுவதும் அவர்களுக்கு வேலை கொடுத்து அவர்களைக் காப்பாற்றுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றனர். அவர்களுடைய ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதில் சோவியத் சர்க்கார் விசேஷ ஊக்கமும் சிரத்தையும் கொண்டிருக்கின்றனர். ஆகவே ஜனங்கள் எவ்விதமான கவலையும் வைத்துக் கொள்ளாமல் தியேட்டர்களில் பிரவேசிக்கின்றனர். அவர்கள் தங்களுடைய தினசரி வாழ்க்கையைப் புதிய முறையில் திருத்தி அமைத்துக் கொள்ள ஆவலாக இருக்கின்றனர். மற்றும் அவர்கள் அன்னிய நாடுகளில் ஜனங்கள் எவ்வாறு வாழ்ந்து வருகின்றனரென்பதையும் அவர்களுடைய நாடகாசிரியர், இலக்கிய ஆசிரியர் முதலியோரின் கருத்துக்களையும் அறிந்து கொள்ள ஆவலாக இருக்கின்றனர். இது காரணமாகவே மாஸ்கோ தியேட்டர்களில் பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி முதலிய தேசங்களைச் சேர்ந்த நாடகாசிரியர்கள் எழுதியுள்ள கதைகளை அடிக்கடி காண்பிக்கின்றனர். ஷேக்ஸ்பியர், பர்னாட்ஷா, விக்டர்ஹியூகோ முதலியவர்கள் வரைந்த நாடகக் கதைகள் அடிக்டிக காண்பிக்கப்படுகின்றன. இதேபோல் உள்நாட்டு நாடகாசிரியர்கள் வரைந்த நாடகக் கதைகளும் அடிக்கடி காண்பிக்கப்படுகின்றன. ருஷ்ய மக்கள் தங்களுடைய இலக்கிய ஆசிரியர்களின் பெருமையையும், நாடகாசிரியர்களின் கௌரவத்தையும் காப்பாற்றும் பொருட்டு மகத்தான தியாகங்களைச்செய்யத்தயாராக இருக்கின்றனர். பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி முதலிய நாடுகளின் மக்கள் தங்களுடைய தேசியக் கவுரவத்தைக் காப்பாற்றுவதற்கே தியாகங்களைச் செய்ய முன்வருகின்ற

(தொடர்ச்சி 14-ம் பக்கம்)

## உத்தம ஆட்சியே மக்கள் ஆட்சியாம்!

# தேசியத் திராவிடனுக்கு ★ அறை கூவல்! ★

[சு. திராவிடமணி]

★

தலைநிமிர் திராவிடா! என்று வெண்தாடி வேந்தன் பெரியார் அவர்கள் முழங்கிப் பல ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால் இன்னும் ஏன் தலைநிமிர்ந்து பார்க்க மறுக்கிறாய், வெறுக்கிறாய் தேசியத் திராவிடனே!

ஓர் காலத்திலே உனது நாடு உலகின் கண் தலை சிறந்து விளங்கியது. அப்போது நீ தலைநிமிர்ந்து நடந்தாய். உனது வாணிபக் கப்பல்கள் வெளியிலிருந்து பொன்னையும், மணியையும் அள்ளிக் கொண்டு வந்ததைத் தலைநிமிர்ந்து பார்த்தாய். உனது நாகரீகச் சிறப்பு மேலைநாடுகளில் மேலோங்கியதைக் கண்டாய். தலைநிமிர்ந்து பார்த்தாய். உனது இனத்தின் வீரம் இமயத்தில் இனக்கொடியை நாட்டியது என்று பூரிப்படைந்து செருக்குடன் தலைநிமிர்ந்து நடந்தாய். உனது தோழர்கள் கடாரத்தைக் கைப்பற்றி வஞ்சிமாலைசூடி, ஆரியக் கனக விசயர்களைக் கல் சுமக்க வைத்ததைக் கண்டு வீரத்துடன் தலைநிமிர்ந்து சிங்கமென நடந்தாய். உனது இனத்திலே யாதொரு வேற்றுமையும் இல்லாதிருந்தமை கண்டு பெருமகிழ்ச்சியுடன் வாழ்ந்தாய்!

ஆனால் திராவிடனே! நீ இப்போது ஏன் நீ தலைநிமிர்ந்து பார்க்க மறுக்கிறாய்? அப்படி நீ இருக்கக் காரணம் என்ன என்பதை நீ எண்ணிப் பார்த்தனையா? எண்ணுகின்றாயா? இனிமேலாவது எண்ணப் போகிறாயா? ஈரோட்டுத் தந்தை அன்று முழங்கினதை நீ அலட்சியப்படுத்தக் காரணம் என்ன? இன்னும், இன்றும் நீ அக்கிழவனின் வார்த்தைகளைக்கூட கேட்க மறுப்பானேன் தேசியத் திராவிடனே! தோழனே! நீ தலைநிமிர மறுப்பதற்குக் காரணம் என்ன என்பதை அன்றே எங்கள் பெரியார் எடுத்துக்காட்டிவிட்டார். அந்தக் காரணம் தான் நீ ஆரியத்தின் அடிவருடியாக, இனத்தை மறந்தவனாக இருப்பது. உனது வாணிபப் பொருள்கள் கோவில்கள், மதம், சாத்திரம், கடவுள்களின் பெயரால் கொள்ளையிடப்பட்டது ஆரியத்தின் சூழ்ச்சி என்பதை அன்றே எங்கள் தந்தை கூறிவிட்டார். இமயத்திலே கட்டப்பட்ட உனது இனக் கொடி இறக்கப்பட்டது அந்த ஆரிய நயவஞ்சகக் கூட்டத்தின் சூழ்ச்சி என்பதைச் சுட்டிக் காட்டினார் எங்கள் தந்தை! நாடுகள் பல கைப்பற்றி அரசாண்ட உனது இனத்தவரை அன்றுமுதல் இன்றுவரை கடவுள், மதம், சாத்திரம் என்பவைகளின் பெயரால் ஏய்த்துப் பிழைத்து வருவது அந்த ஆரியப் பார்ப்பனீயம் என்று அன்றே பெரியார் எடுத்துக்கூறினார். சமூகத்திலே யாதொரு வேற்றுமையும் இல்லாதிருந்தும், உனது இனத்தை நால்வருணம் என்றும், உள் சாதிகள் ஆயிரக் கணக்காகவும் உண்டாக்கியது அந்த ஆரியம் வகுத்த மனுதர்ம நூல் என்பதை அன்றே எங்கள் பெரியார் தெளிவாக விளக்கிவிட்டார்.

மதுரையிலே, சேலத்திலே, கரூரிலே நடந்த கொள்ளைகள், கலகங்கள் அனைத்தும் அந்த ஆரியத்தின் வஞ்சகச் செயல் என்பதை எங்கள் தந்தை கூறிவிட்டார். அக்கொள்ளைகளில் கலவரங்களில் அடிபட்டவர்கள், அங்கமிழந்தவர்கள் அனைவரும் திராவிடர்கள் தான் ஆரியர்கள் அல்ல என்பதைக் கண்டு ஆரியப் பார்ப்பனீயம் கூரைமீது நின்று சிரிக்கிறது. ஆகஸ்ட் புரட்சியிலே இறந்தவர்கள், அங்கமிழந்தவர்கள், அடிபட்டவர்களில் 100க்கு 99 பேர் திராவிடர்கள் என்பதை அன்றே எங்கள் பெரியார் தெளிவாக்கி விட்டார். இவ்வளவையும் அறிந்துகொண்டும் ஏன் தலைநிமிர மறுக்கிறாய் தேசியத் தோழனே! அவர் கூறும் பொன்மொழிகளைப் புன்மொழிகளெனத் தூற்றுகின்றாய். நாத்திகப் பட்டம் கட்டிப் பல்லிளிக்கின்றாய்! ஆரியம் உன்னைப் புகழ்வது கண்டு உனது தன்மானத் தந்தையை அலட்சியப் படுத்துகிறாய் தோழனே!

இன்னும் கூறுகிறேன் கேள் தேசியத் தோழனே! பழமைப் பாசறையிலுள்ள உன்னைப் புதுமைப் பூங்காவிற்கு அழைத்துச் செல்லும் சமூகச் சீர்திருத்தத்திற்குச் சட்டத்தின் மூலம் இருட்டடிப்பு, முட்டுக்கட்டை செய்து வருவது திரைமறைவிலுள்ள ஆரியம் என்பதனை அறிந்துகொள். உனது இனத்தில் நால் வருணத்தையும், பார்ப்பனீயம் தழைக்கும் சூழ்ச்சிகளையும் புகுத்தும் திரைப்படங்கள் பிடிக்கவும் மற்றையச் சீர்திருத்தப் படங்களைப் பிடிக்கச் செய்யாதிருக்கவும் சட்டம் இயற்றப்பட்டிருப்பது ஆரியத்தின் நவீனசூழ்ச்சி என்பதனை உணர்ந்துகொள். உணர்ந்து கொண்ட பிறகாவது தலைநிமிர்ந்து பார் தேசியத் திராவிடனே.

உனது இனம் பல துறைகளிலும் பல்லாண்டு கால்மாக முன்னேறாததற்கு காரணம் ஆரியமும், தேசியமும்தான் என்பதைப் பல ஆண்டுகளுக்கு முன்பே எடுத்துக் காட்டினார் தோழனே ஈரோட்டுப் பெரியார்! அகண்ட இந்தியா என்ற தேசிய அபின் பெரும் போதை என்பதனை அன்றே உனக்குச் சொன்னார். அப்போதைதான் "நீ உன் வீட்டுக்குப் போடும் சிமிட்டி டால்மியாவுடையது. நீ பயன் படுத்தும் ஊசி முதல் பெரிய இயந்திரங்கள்வரை டாட்டாவினுடையது. நீ உன் பெண்களுக்கு அணிவிக்கும் வைரங்கள் அனைத்தும்சுராஜ்மல்ஷாவுடையது. நீ விரும்பிப் படிக்கும் பத்திரிகைகள் வடநாட்டு கோயங்காவினுடையது அல்லது ஆரியனுடையது. நீ உடுத்திக் கொள்ளும் உயர்ந்த துணிகள் எல்லாம் செல்லாராமுடையது. நீ ஓர் காலத்திலே 6000 மைல்களுக்கப்பாலுள்ள ஆங்கில நாட்டரசி விக்டோரியாவுக்குப் பட்டுத் துணியை அன்பளிப்பாக அனுப்பினாய். ஆனால் நீ இன்று உடுத்தும் பட்டுத் துணிகள் வடநாட்டானுடையது. ஓர்காலத்திலே உனது நாடு செல்வ வளம் மிகுந்திருந்த காலத்திலே—உனது வீரம் திக்கெட்டும் பரவியிருந்த காலத்திலே—உனது இனமக்கள் இங்கிருந்து வாசனைப் பொருள்களை வெளி நாடுகளுக்கு அனுப்பி வாணிபம் செய்தார்கள். கப்பல்

[தொடர்ச்சி 13ம் பக்கம்]

# கடவுள் தர்பார்!

★

கடவுள்:— (தனது மனைவிகள், பரிவாரங்கள் சகிதம் பரமண்டலத்தில் உள்ள தர்பார் மண்டபத்தில் வந்து சிம்மாசனத்தில் உட்கார்ந்து தும் கனைத்துக்கொண்டு) வேண்டும்! இந்தநாஸ்திக ஆணவம்பிடித்த அயோக்கியப்பய்யன்களுக்கு. இது தானா? இன்னும் என்ன செய்யப் போகிறேன் பார்! அதற்குள் ஆகிவிட்டதா உங்களுக்கு, உஹூம் உஹூம் என்று ஆத்திர மூச்சுவிடுகிறார்.

அம்மன்:— கடவுளின் வலப்புறத்தில் வீற்றிருக்கும் மனைவியாகிய பாலகுஜாம்பாள் (இளமுலையம்மன்) நாதா! என்ன தாங்களே எதையோ பேசிக்கொண்டு ஆத்திரப்படுகிறீர்களே! எனக்கு ஒன்றும் புரியவில்லையே! தங்களுக்கு ஏன் இவ்வளவு ஆத்திரம் வரவேண்டும்? தாங்கள் தான் சர்வ வல்லமையும், சர்வவியாபகமும்உள்ள சர்வக்ஞன் ஆயிற்றே! இப்படி ஆத்திரத்துடன் துடிக்கலாமா?

கடவுள்:- அதெல்லாம் பாட்டி கதையாகி விட்டது. நீ சொல்லும் நம்முடைய இந்தச் சக்தியை இந்தக் காலத்துப் பய்யன்கள் எவனும் நம்புவதில்லை, ஒப்புக் கொள்ளுவதில்லை அதற்கேற்றபடி நடந்துகொள்ளுவதில்லை. அந்தப் பயல்களுக்குப் புத்திவரட்டும் என்று சில காரியம் செய்தேன். அவர்கள் இப்போது ஓடிவருகிறார்கள் நாயாட்டமா. எனது ஞானதிருஷ்டியால் அவர்கள் வருகிறது தெரிந்தது. அதோ வருகிறார்கள். ஆதலால் எனக்கு ஆத்திரம் வந்தது.

அம்மன்:— தாங்கள் மகாகருணாநிதி ஆயிற்றே! மக்கள் மடையர்கள் தானே! அவர்களுக்குத் தங்கள் சக்தியை அறிந்துகொள்ள யோக்கியதை உண்டா? சுவாமி! அவர்கள் மீது உங்களுக்குக் கோபம் வேண்டாம்! கருணை பாலியுங்கள்!

கடவுள்:- சிச் சீசீ! பொட்டச்சியே! வாயைமூடு! இந்த விஷயத்தில் நீ ஒன்றுக்கும் குறுக்கே வரக்கூடாது. உனக்கு ஒன்றுமே தெரியாது. உன் அளவில் உன் வேலையைப்பார். இது பூலோகமல்ல பெண்கள் சுதந்தரம் கொண்டாடுவதற்கு. இது தெய்வலோகம் என்பது உன் மனதிலிருக்கட்டும்.

அம்மன்:— சுவாமி! மன்னிக்க வேண்டும். தெரியாமல் பேசிவிட்டேன். தப்பு, தப்பு. போதும் என் கிறவரையில் தோப்புக்கரணம் போட்டுவிடுகிறேன். (என்று சொல்லி உட்கார்ந்து விடுகிறாள்)

மகா ஜனங்கள்:- (கூட்டமாக வந்து) சுவாமி பகவானே! கேள்வி கேட்பாடு இல்லையா? சோறு இல்லை! துணி இல்லை,!! பெண்டு பிள்ளை, வீடுவாசல் சொத்துக்குப் பாதுகாப்பு என்பதே இல்லை. அடியும், உதையும், குத்தும், வெட்டும் கொண்ட அதிகாரத்துக்கு மாத்திரம் கணக்கில்லை!!! எங்களால் சகிக்க முடியவில்லையே பூலோகத்தில் நாங்கள் படும்பாடு கொஞ்சம்கூட தங்களுக்குத் தெரியவில்லையா? நாங்கள் இந்தப்பாடு படும்போது நீங்கள் பெண்டுபிள்




ளைகள் பரிவாரங்கள் சகிதம் சுகமாக இருந்து கொண்டு தர்பார் நடத்துகிறீர்களே இது தானா ஆபத் பாந்தவன், அனாத ரக்ஷகன், சர்வலோக சரண்யன் ஆன தங்களுக்குத் தகுதி. அய்யோ! அய்யோ! எங்கள் நிலைக்குப் பரிகாரம் இல்லையா?

கடவுள்:— சீச்சீ! பகுத்தறிவற்ற நாய்களே வாயை மூடுங்கள். உங்கள் யோக்கியதைக்கு இங்கு வந்து பேசத் துணிந்து விட்டீர்களே! நாஸ்திகப் பயல்களே! ஆணவம் பிடித்த அகங்காரிகளே! உங்கள் வினைப்பயனை நீங்களே அனுபவிக்கிறீர்கள். உங்கள் நினைப்பின் பயனை நீங்கள் அனுபவிக்கிறீர்கள். பாருங்கள்! பாருங்கள்! இவ்வளவுதானா? இன்னமும் பாருங்கள் என்ன நடக்கிறது என்று. என்னை ஏமாற்றப் பார்க்கிறீர்களே! அயோக்கிய சிகாமணிகளே.

மகாஜனங்கள்:- ஸ்வாமி! தாங்கள் இப்படிக் கோபிக்கலாமா? நாங்கள் ஒரு அபராதமும் செய்யவில்லையே. ஒரு கெட்ட நினைப்பும் நினைக்கவில்லையே. தங்களுக்கு அதிருப்தி ஏற்படும்படி ஒரு காரியமும் செய்யவில்லையே.

கடவுள்:- சீச்சீ ஆணவம் பிடித்த அறிவிலிகளே! வாயை மூடுங்கள். என் ஆத்திரத்தைக் கிளப்பாதீர்கள்.

மகாஜனங்கள்:- சுவாமி கோபிக்கலாகாது. நாங்கள் மடஜன்மங்கள். தங்களால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள். தங்கள் பிள்ளைகள் நாங்கள். தாங்கள்தான் காப்பாற்றவேண்டும். மன்னித்தருள வேண்டும். தாங்கள் கோபிப்பதன் காரணமும் ஆத்திரப்படுவதன் காரணமும் எங்களுக்குப் புரியவில்லை. சத்தியமாய் தங்கள் மீது ஆணையாய், அம்மன் மீது ஆணையாய்ச்சொல்லுகிறோம். எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. கடாட்சித்தருள வேண்டும்.

கடவுள்:- கடாட்சமா கடாட்சம். இப்போது நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?

மகாஜனங்கள்:- பூலோகத்தில் இருக்கிறோம்.

கடவுள்:— பூலோகத்தில் யாருடைய ராஜ்ஜியத்தில் இருக்கிறீர்கள்?

மகாஜனங்கள்:— சுவாமி நாங்கள் சுயராஜ்ஜியத்தில் இருக்கிறோம்.

கடவுள்:— (அம்மனைப் பார்த்து) கேட்டாயாடீ! இந்தப் பசங்கள் சொல்லுவதை. எவ்வளவு அகங்காரமாக ஆணவமாகப் பேசுகிறார்கள் பார்த்தாயா?

அம்மன்:- அவர்கள் என்ன பேசுகிறார்கள். தாங்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லுகிறார்கள். அதில் ஆணவமோ அகங்காரமோ ஒன்றும் எனக்குத் தெரியவில்லையே.

கடவுள்:— தெரியவில்லையா? நீயும் அவர்களோடு சேர்ந்தவளாகி விட்டாய்.

அம்மன்:— நாதா! தாங்கள் இப்படி ஆத்திரப்பட்டுக் கோபித்துக் கொள்ளாதீர்கள். தாங்கள் பொறுமை ஸ்ரூபி. கருணை ஸ்ரூபி. அப்படி இருக்க இப்படிச் சொல்லலாமா?

கடவுள்:— என்னடீ பொறுமை ஸ்ரூபி கருணை ஸ்ரூபி. அவர்கள் இங்கு குறைகளை தங்கள் கஷ்டங்களைச் சொல்லிக்கொள்ள வந்திருக்கிறவர்கள். எங்கிருக்கிறார்கள் என்று சொன்னதைக் கேட்டாயோ? சுயராஜ்ஜியத்தில் இருந்து வந்தார்களாம். சுயராஜ்ஜி

## எங்களிடம் கிடைக்கும் நூல்கள்.

அர்ச்சுனன் நிலைய வெளியீடு.

ஆசிரியர் என். இ. பாலகுரு எழுதிய,

| | | | |
|---|---|---|---|
| 1. | புரட்சி முரசு | ரூ. | 0—12—0 |
| 2. | மக்கள் ஆட்சி | ,, | 0— 4—0 |
| 3. | இவள் விதவையாம் | ,, | 0— 3—0 |
| 4. | தமிழகம் இழந்த தளபதி | ,, | 0— 4—0 |

ஷை புத்தகங்கள் மொத்தமாகவும் சில்லரையாகவும் எங்களிடம் கிடைக்கும். வேண்டுவோர் தேவைக்கு எழுதவும்.

புதுமை நிலையம்,
வடக்குத் தெரு, கோடுமுடி.


யத்தில் இருப்பவர்களுக்கு இங்கு என்ன வேலை? என்னிடத்தில் எதற்குத் தங்கள் குறைகளை சொல்லிக் கொள்ளுவது? சுயராஜ்ஜியம் என்றால் என்ன அர்த்தம் என்று உனக்குத் தெரியுமோ இல்லையோ? சுயஆர்ஜிதம் என்றால் என்ன? ஒருவன் தானாகச் சம்பாதித்தது என்று தானே அர்த்தம். அதுபோல் சுயராஜ்ஜியம் என்றால் என்ன? அது அவனுடைய ராஜ்ஜியம் என்று தானே அர்த்தம். அவர்களுடைய ராஜ்ஜியத்தில்அவர்கள் என்னவேண்டுமானாலும் செய்துகொள்ளலாம் என்று தானே அர்த்தம். ஆகவே மகா ஜனங்களின் ராஜ்ஜியத்தில் மகா ஜனங்கள் என்னவேண்டுமானாலும் செய்யலாம், என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். இந்த வெட்கங்கெட்ட பசங்கள் இங்கு என்னத்துக்கு வந்து "கேள்வி கேட்பாடு இல்லையா" என்று பல்லைக் காட்டிக்கெஞ்சுவது என்பது.

இந்தப் பயல்கள் நான் ஒருவன் இருக்கிறேன் என்பதாக நினைத்தார்களா? இந்த ராஜ்யம் என்னுடையது என்பதை மதித்தார்களா? என்னால் எதுவும் செய்ய முடியும் என்பதைஒப்புக்கொண்டார்களா? "இது கடவுள் ராஜ்யம், இது கடவுள் செயல் என்பதை நினைத்தார்களா? இப்படிப்பட்ட பயல்கள் உதைபட்டால், அடிபட்டால் சோத்துக்குத் திண்டாடினால், துணிக்குப்பறந்தால், பெண்டுபிள்ளைகளைக் கண்டவன் அடித்துக்கொண்டு போனால் எனக்கு என்ன? உனக்குத் தான் என்ன? கவலைப்படட்டும்! இன்னும் படட்டும்! சுயராஜ்ஜியம் என்பதிலுள்ள சுயம் என்பது ஒழியும் வரை படட்டும்! நாசமாகட்டும்! எவன் ராஜ்ஜியம் எப்படிப் போனால் எனக்கு என்ன கவலை?

**மகாஜனங்கள்:-** சுவாமி! சுவாமி! இந்தச் சங்கதி இதுவரையில் எங்களுக்குத்தெரியவில்லையே. பூலோகத்தில் எவனோ நாலு வயதுச் சோத்துப் பிள்ளைகள் சுயராஜ்ஜியம் சுயராஜ்ஜியம் என்று கூப்பாடு போட்டான்களென்றுநாங்களும் தெரியாமல் கூப்பாடு போட்டு இந்தக்கதி ஆகிவிட்டோம். இனி அது தங்களுடைய ராஜ்ஜியம் தான். தாங்கள்தான் எங்களை ஆள வேண்டும். சுயராஜ்ஜியம் என்பதே நாஸ்திகத்தன்மை என்பதையும் முட்டாள்தனம் என்பதையும் இப்போது நாங்கள் நன்றாய் உணர்ந்து விட்டோம். எங்களைக் காப்பாற்றி அருளவேண்டும்.

**கடவுள்:-** இது மாத்திரமா? உங்கள் நாஸ்திகத் தன்மைக்கு உதாரணம் இன்னும் எவ்வளவு அக்கிரமம் செய்கிறீர்கள்? சுயராஜ்ஜியம் என்று, சொல்லிக் கொண்டு உங்கள் இராஜ்ஜியத்தில் நீங்கள் ஒருவருக்கொருவர் உதைத்துக்கொண்டால் அமெரிக்காவுக்கு எதற்கு ஆகப்பிராது கொண்டு போவது. அவன்களென்ன என்னை விடப் பெரிய சக்தி வாய்ந்தவன்கள். இது எனக்கு எவ்வளவு அவமானமாக இருக்கிறது. நினைத்தால் கொதிக்கிறதே இரத்தம். நான் கல்லுபோல்-ஏன் கல்லாகவே ஊருக்கு 100, 200 ஆயிரம் என்கின்ற கணக்கில் இருக்கிறேன். எனக்கு என்று தினம், மாதம், வருஷம் என்கின்ற கணக்கில் எத்தனையோ கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்கிறீர்கள். தொட்டதற்கெல்லாம் பிரார்த்தனை அர்ச்சனை தொழுகை செய்கிறீர்கள். இந்தக் காரியத்துக்கு என்னைக்கொஞ்சம் கூட மதிக்காமல் நினைக்காமல் நான் ஒருவன் இருக்கிறேன் என்பதைச் சிறிதுகூட தெரிந்தவர்களாகக் காட்டிக்கொள்ளாமல் ஓடுகிறீர்களே அமெரிக்காவுக்கு. வெட்கமில்லை! மானமில்லை! நீங்கள் ஆஸ்திகர்களா? கடைந்தெடுத்த நாஸ்திகர்கள் அல்லவா? மகாஆணவம் பிடித்த அகங்காரிகளல்லவா? போங்கள் என் முன்நில்லாதீர்கள். உங்களைப் பார்க்கப் பார்க்கப் பதறுது கொதிக்கிது துடிக்கிது. போங்கள் வெளியே டேய் துவாரபாலகா! டேய் நந்தி! டேய் கணங்களே! இந்தப் பசங்களை வெளியேற்றுங்கள்.

**அம்மன்:-** சுவாமி! கோபித்துக் கொள்ளாதீர்கள். தாங்கள் சர்வ சக்தர் சர்வதயாபரர். தாங்கள் கோபிக்கப்படாது. அவர்கள் நம்ம பிள்ளைகள் தானே.

**கடவுள்:-** போடி போடி! நம்ம சர்வசக்திக்கும் சர்வகாரணத்துக்கும் ஆபத்து வருகிறபோது என்ன பொறுமை என்ன மன்னிப்பு-நாம் மிஞ்சிய பிறகல்லவா மற்ற சங்கதிகள்போ, போ! உனக்கு ஒன்றும் தெரியாது. "தையல் சொற் கேளேல்" தெரியுமா?

நமக்கு ரத்தக் கொதிப்பு ஏற்பட்டு விட்டது சிறிது சாந்திவேண்டும்!

போங்கள்!

யாவரும் வெளியில். …………

(தர்பார் மண்டபக் கதவடைக்கப்பட்டு விட்டது)

### அசோக சக்கரம்.

மதுரையில் தோழர் பண்டித இராம மீனாட்சி சுந்தரம் பிள்ளை வன்னியர் குலக்கொடியை ஏற்றும்போது அசோகர் நம் நாட்டின் மீது படை எடுத்த ஒரு விரோதி. அவ்விரோதியின் சின்னமான சக்ரத்தை நாம் ஏற்றுக் கொள்ள முடியாதெனக் கூறினார்.

## இழிவு நீக்கமே எமது சுயராஜ்ஜியம்!

# ஏழை இந்தியாவின் பேராலா :: :: இந்தக் கொள்ளை?

## உள்ளே புண்ணும் புழுவும்—வெளியே புனுகு சவ்வாது.

★

இந்தியாவின் இருமுக்கிய வெளி நாட்டுப் பிரதிநிதிகளான தோழியர் விஜயலக்ஷிமி பண்டிட், தோழர் ஆசப் அலி ஆகிய இருவருக்கும் மாதச் சம்பளம் முறையே ரூ 3500, ரூ 4500 என்றும், இத்துடன் நன்றாக அலங்கரிக்கப்பட்ட வீடு, மோட்டார்கார், டிரைவர், வீட்டை உஷ்ணப்படுத்துதல் ஆகியவை அரசாங்கச் செலவில் இனாமாகத் தரப்படுகின்றதென்றும் சமீபத்தில் செய்தி வெளி வந்திருக்கிறது.

**1. தோழர் ஆசப் அலி.**

அமெரிக்க அய்க்கிய நாட்டிலுள்ள தூதுவர், ஆண்டுக்கு ரூ. 3,37,500 செலவில் இந்தியச் செய்தி ஸ்தாபனம் என ஒன்று வைத்திருக்கின்றார். இவருக்கு 1946-47 ஆண்டில் ரூ. 7,76,500 செலவாயிற்று. 1947-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 1948 மார்ச் வரை ஆகக்கூடிய செலவு ரூ. 7,66,600 எனத் திட்டமிடப்பட்டிருக்கிறது. மேலும் இது அவரவர்கள் சொந்த நாட்டிற்குப் போய்வரும்செலவைத்தவிர்த்ததேயாகும்; அன்றியும் எல்லாப் பிரதிநிதிகளின் சம்பளத்துக்கும் வருமானவரி கிடையாது.

**2. தோழர் லட்சுமி பண்டிட்.**

மாஸ்கோவிலுள்ள இந்திய தூதுவருக்கு மட்டும் 1947 ம் ஆண்டு ஆகஸ்டு 15-ந் தேதி முதல் 1948 மார்ச் 31-ந் தேதிவரை ஆகும்செலவு ரூ. 7,05,700 என்று திட்டமிடப்பட்டுள்ளது. இதில் இந்த ஸ்தாபனத்தைத் நிறுவும் போது ஏற்பட்ட மரச் சாமான்கள் வாங்கும் செலவான 2 லட்ச ரூபாயும் சேரும்.

**3, தோழர் K. P. S. மேனன்.**

மூன்றாவது பிரதிநிதியான தோழர் K. P. S. மேனனுக்கு மாதச் சம்பளம் ரூ 4500 அலங்கரிக்கப்பட்ட வீடு, மோட்டார்கார், டிரைவர் ஆகியவை அரசாங்கச் செலவில். அத்துடன் ஆண்டொன்றுக்கு ரூ. 62,000 செலவில் ஒரு பத்திரிகை ஸ்தாபனமும் இவருக்காக நிறுவப்பட்டிருக்கிறது. மேலும் சைனாவில் சொந்தமாக ஒரு நிலம் வாங்கிக் கட்டடம் கட்டுவதற்காக 5 லட்ச ரூபாய் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. 1947 ஆகஸ்டு 15 முதல் 1948 மார்ச் 31 வரை இப்பிரதிநிதியின் செலவுக்கென ரூ. 4,52,100 திட்டமிடப்பட்டிருக்கிறது. இம் மூன்று தூதுவர்களின் கீழ் வேலை செய்யும் பணியாட்களின் தொகை (கீழ்த்தரச் சிப்பந்திகள் தவிர) அமெரிக்காவில் 46, ரஷ்யாவில் 14, சைனாவில் 14, ஆகும்.

**4. தோழர் சர். ராமராவ்.**

ஜப்பானில் இந்தியத் தூதுவராயுள்ள சர். ராமராவுக்கு மாதச் சம்பளம் ரூ. 3500, பிரதிநிதிப்படி ரூ. 2000. அத்துடன் இலவசமாக மோட்டார், டிரைவர், விடுதி, உணவுவசதிகள்.

**5. தோழர் V. K. கிருஷ்ணமேனன்**

லண்டனில் இந்திய ஹைகமிஷனராயுள்ள தோழர் வி. கே. கிருஷ்ணமேனனுக்குத் தற்காலிகமாக ஆண்டொன்றுக்குச் சம்பளம் 3000 பவுன், படி 1000 பவுன்; அலங்கரிக்கப்பட்ட விடுதி, மோட்டார், டிரைவர் இவையாவும் இலவசம்.

**6. தோழர் அலி ஜாகீர்**

ஈரானிலுள்ள இந்தியத் தூதுவரான தோழர் அலி ஜாகிருக்கு மாதச் சம்பளம் ரூ. 3000, பிரதிநிதிப்படி ரூ. 2000, இலவச விடுதி, மோட்டார் கார் உண்டு. இவருக்காக ரூ. 43,400 செலவில் டெஹ்ரானில் ஒரு பிரஸ் வசதியும் ஏற்பட்டுள்ளது. இவரிடமுள்ள சிப்பந்திகளின் எண்ணிக்கை 11. 1947 ஆகஸ்டு 15 முதல் 1948 மார்ச்சு 31 வரை இத்தூதுவரின் செலவு ரூ. 46,000 எனத் திட்டமிடப்பட்டுள்ளது.

**7. தோழர் R. A. பெக்**

இந்தியாவிலுள்ள பிரஞ்சு, போர்த்துகீசிய நாடுகளில் பிரதிநிதியாயுள்ள தோழர் மிர்சா ரஷித் அலி பெக் அவர்களுக்குச் சம்பளம் மாதம் ரூ. 2000, பிரதிநிதிப்படி ரூ. 300.

**8. தோழர் R. D. சத்தி**

ஷாங்ஹாயிலுள்ள இந்தியப் பிரதிநிதி கேப்டன் R. D. சத்திக்கு மாதச் சம்பளம் ராணுவ அந்தஸ்துக்குத் தக்கபடியும், மேலும் பலவிதமான பெயர்களில் ஆண்டுக்கு சுமார் ரூ. 5000மும் இலவச விடுதியும்.

**9. தோழர் B. தயாள்**

பாங்காக்கிலுள்ள பிரதிநிதியான தோழர் பகவத் தயாளுக்கு மாதச் சம்பளம் ரூ. 1,100; வெளி நாட்டுப்படி ஆண்டுக்கு ரூ. 600; வீட்டு வாடகைக்காக ஆண்டுக்கு ரூ. 300.

**10. தோழர் A. N. மேத்தா**

இந்தோ-சீனாவிலுள்ள இந்திய ஸ்தானீகரான தோழர் A. N. மேத்தாவுக்கு மாதச் சம்பளம் ராணுவ அந்தஸ்துக் கேற்ப; விசேஷ சம்பளம் மாதம் ரூ. 150. வெளிநாட்டுப்படி ஆண்டுக்கு ரூ. 400. வீட்டு வாடகைக்காக ஆண்டொன்றுக்கு ரூ. 300.


**11. தோழர் N. ராகவன்**

படேவியாவிலுள்ள இந்தியப் பிரதிநிதியான தோழர் N. ராகவனுக்கு மாதச் சம்பளம் ரூ. 2,250; வெளிநாட்டுப்படி மாதம் ரூ. 1,250. வசதியுடன் கூடிய விடுதி

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

## சூத்திரனாக்கும் கடவுளை சுக்கு நூறாக்கு!

# இதுவா முடிவு?



பரிதாபம்! பரிதாபம்!! நினைத்தற்கரிய பரிதாபம்!!!

உலகம் போற்றும் பெரியார் காந்தியார் சுட்டுக் கொல்லப்பட்டு முடிவை அடைந்தார் என்பது கேட்டு இந்தியாவில் மனித உடல் போர்த்த எப்படிப்பட்ட மனமும் துடி துடி என்று துடித்து நிற்கும் என்பதில் சிறிதும் அய்யமில்லை. எப்படிப்பட்ட அயோக்கியனும் ஆசைப்படாத—எதிர்பார்க்க முடியாத ஒரு மாபெரும் பாதகமான நிகழ்ச்சி இது என்பது தான் இதன் முடிவாகும். இதற்காக இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள நாற்பது கோடி மக்களின் துக்கத்தில் நாமும் துக்கத்தோடு பங்கு கொள்ளுகிறோம். இது இப் பெரியார் காந்தியாருக்கு நேர்ந்திருக்க வேண்டாத முடிவாகும். இந்த மாபெரும் கொலை பாதகத்தைச் செய்த பாதகனை—இந்து மத வெறியனைப் பலமாக வெறுக்கிறோம். உலகமும் ஒன்று போலவே வெறுக்கும்.

உலகத்தாரால் போற்றப்பட்ட ஒரு பெரியாருக்கு இதுவா முடிவு?

பரிதாபம்! பரிதாபம்!! சகித்தற்கரிய பரிதாபம்!!!

[ஆ-ர்.]

# குடி அரசு

31—1—48 சனிக்கிழமை.

## ஸ்ட்ரைக்குகளும்— கம்யூனிஸ்டுகள் சம்மந்தமும்.

★

காங்கரஸ் ஆட்சி ஏற்பட்ட பிறகு வேலை நிறுத்தங்களுக்கு ஓய்வென்பதே இல்லாமல் எங்காவது ஒரு பக்கம், எந்த இலாக்காவிலாவது, ஏதோ ஒரு வகையான தன்மையில் வேலை நிறுத்தம் என்பது நடந்த வண்ணமாகவே இருந்து வருகிறது.

இதற்குக் காரணம் அனுபவமில்லாததும் பொறுப்பு இல்லாததுமான ஆட்சிதான் என்பதைத்தவிர வேறு ஒன்றும் சொல்ல நம்மால் இயலவில்லை. இந்த லட்சணத்தில் நடைபெறும் ஆட்சிக்கு மக்களிடம் மதிப்பும் இல்லாமல் போய் விட்டதால் உள்நாட்டுக் கலகம் என்பவை தலைவிரித்தாடுவதைப் போல் வேலை நிறுத்தமும் எங்கும் தலைவிரித்தாட ஏற்பட்டு விட்டது. வேலை நிறுத்தங்கள் ஏற்படும் போது ஒவ்வொரு வேலை நிறுத்தத்திற்கும், சர்க்கார் முதலாளிகளையே ஆதரித்து நிற்கின்றது என்பது ஒருபுறமிருந்தாலும், தொழிலாளிகளை ஒழுங்காக நடத்த யோக்கியமான, பொறுப்பான தலைவர்களுமில்லை என்பதே வேலை நிறுத்தங்களுக்குப் பெருவாரியான தோல்வியும், அதில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்குப் பெருந்தொல்லையும் துன்பமும் ஏற்படுவதற்குக் காரணமாகும்.

இன்றைய சுயராஜ்ஜிய அரசாங்கம் என்பது முதலாளிகள் அரசாங்கமேயாகும். "நேருவும், காந்தியாரும், பட்டேலும் முதலாளிகளா" என்று சிலர் கேட்கலாம். இப்படிக்கேட்பவர்கள் விஷயமறியாதவர்களே ஆவார்கள். நேருவும், காந்தியாரும், பட்டேலும் முதலாளிகளா? அல்லவா? என்

பது விவகாரத்துக்கிடமானது என்று வைத்துக் கொண்டாலும், இவர்கள் பார்ப்பனர்களால் பிரதிஷ்டை செய்து வைக்கப்படும் கடவுள்களைப் போல் முதலாளிகளால் பிடித்து வைக்கப்பட்ட ஆட்சியாளர்கள் என்பதை யாராவதுமறுக்க முடியுமா? என்று கேட்கிறோம்.

நேருஜீ ஒரு சீமான் பார்ப்பனர், காந்திஜீ ஒரு தெய்வீக சக்தி கொண்ட மகாத்மா, பட்டேல்ஜீ சீமான் தன்மை கொண்ட காலித்தனப் பிரபு. அதாவது குஜராத்தி முதலாளி. இம்மூவரும் சொந்த முறையில் ஏழைகள் அல்ல, தொழிலாளிகள் அல்ல. வாழ்க்கையில் ஏழைகளோ தொழிலாளிகளோ அல்ல. சராசரி பொது மக்களுக்குக் கீழ்ப்பட்டவர்களுமல்ல. பிராம்மணத் தன்மை தெய்வீகத் தன்மை காலித்தன்மை கொண்ட பிரபுத் தன்மை ஆகிய மூன்றும் முதலாளித் தன்மையே-ஏன் அதற்கும் மேற்பட்ட தன்மையே ஆகும். அதாவது பாடுபடாமல், உடலுழைப்பு பாட்டாளி மக்கள் தன்மை இன்னது என்பதை அறியாமல், மற்றவர்களை நடத்திச் செல்லும் மைனர் எஜமானத் தன்மையேயாகும். இது எப்படியோ போகட்டும்! இவர்களுக்கு ஓட்டுக் கிடைக்கும்படி செய்து, ஓட்டுக் கொடுத்துத், தெரிந்தெடுத்துப் பதவியில் உட்கார வைத்துப் பெருமைப்படுத்துகிறவர்கள் யார்? மகாத்மா—என்று காலில் விழுந்து கும்பிட்டு நெற்றியில் குங்கும சாந்திட்டுக் கொஞ்சுகிறவர்கள் யார்? என்பதைப்பார்த்தால் தெரியவரும், நாம் சொல்லுவதின் உண்மை.

பிர்லா, பஜாஜ், டாடா, டால்மியா, பம்பாய் மில் முதலாளிகள், வியாபாரிகள் தயவில்லாவிட்டால் இவர்களுக்கு இந்தப் பதவிகள் எப்படிக் கிடைக்க முடியும்? என்பதோடு ஏழை மக்களுக்கும், தொழிலாளிகளுக்கும், 100க்கு 90 பேர்களான பாமர மக்களுக்கும் இவர்கள் பதவிக்கும் ஏதாவது சம்மந்தம் (ஓட்டு) உண்டா என்றும் கேட்கிறோம்.

அன்றியும் இந்த ஆளுகள் முதலாளிகளை ஆதரித்து, அவர்களுடைய எதிரிகளான ஏழை மக்களை தொழிலாளர்களை அடக்கி ஒடுக்கி விட்டு, அவர்களை (முதலாளிகளை) க்காப்பாற்றா விட்டால் சர்க்கார் இவர்களது ஆட்சி

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் சேதி.

★

காந்தியார் சுட்டுக் கொல்லப்பட்டார் என்கின்ற சேதியானது, எனக்குக் கேட்டதும் சிறிதுகூட நம்ப முடியாததாகவே இருந்தது. இது உண்மைதான் என்ற நிலை ஏற்பட்டதும் மனம் பதறி விட்டது. இந்தியாவும் பதறி இருக்கும். மதமும் வைதீகமும்தான் இக்கொலை பாதகத்துக்குத் தூண்டுகோலாய் இருந்திருக்கலாம் என்பது என் கருத்து. இக்கொலைக்குத் திரை மறைவில் பலமான சதி முயற்சி இருந்தே இருக்கவேண்டும். அதுவும் காந்தியார் எந்த மக்களுக்கு ஆகப் பாடுபட்டாரோ—உயிர் வாழ்ந்து வந்தாரோ அவர்களாலேயே தான் இச்சதிச் செயல் ஏற்பட்டிருக்க வேண்டும். இது மிக மிக வெறுக்கத்தக்க காரியமாகும். இவரது காலி ஸ்தானம் எப்படிப் பூர்த்தி செய்யப்படும் என்பது ஒரு மாபெரும் பிரச்சினையே ஆகும். இப்பெரியாரின் இப்பரிதாபகரமான முடிவின் காரணமாகவாவது நாட்டில் இனி அரசியல் மத இயல் கருத்து வேற்றுமையும் கலவரங்களும் இல்லாமல் இருக்கும்படி மக்கள் நடந்து கொள்ளுவதே அவரை நாம் மரியாதை செய்வதாகும்.

ஈ. வெ. ராமசாமி.

---

நிலைக்குமா என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம். அன்றியும் முதலாளிகள் புத்திசாலிகள், கட்டுப்பாடு உடையவர்கள், பண வசதியும் செல்வாக்கும் உடையவர்கள். நாளைக்கு மந்திரிகளாகவும் வரக்கூடியவர்கள். தொழிலாளிகளுக்கு இவற்றில் ஏதாவது ஒரு யோக்கியதை இருக்கிறது என்று யாராவது சொல்ல முடியுமா? தொழிலாளிகள் மொத்த ஜனத்தொகையில் 100க்கு 80பேர்களாவது இருப்பார்கள். இவர்களுக்கு ஓட்டு 215ல் 6 ஓட்டுகள் தான் இருக்கலாம். அதுவும்பார்ப்பனர்களும், தொழிலாளிகளின் பேரால் தொழில் செய்யாமல் வாழ்க்கை நடத்தும் பொதுஉடைமைவாதிகள், சமதர்ம வாதிகள் என்று சொல்லப்படும் எவ்விதக் காரியார்த்தமான பொறுப்புமில்லாத தியாகிகளாகவும் இருக்கலாம். இந்த நிலையில், தொழிலாளிகளுக்கு என்ன காரியம் தான் நிறைவேற்றிக் கொள்ளமுடியும்?

வேலை நிறுத்தங்கள் சதா சர்வ காலம் ஏற்பட்ட வண்ணமாக இருக்கிறதையும், சர்வ வேலை நிறுத்தமும் பெரிதும் தோல்வியே அடைந்து வருவதையும், தோல்வி மாத்திரமல்லாமல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களும், அவர்களது மனைவி மக்கள் ஆகியவர்களும், தொல்லையும் துன்பமும் அடைந்து நைந்துகொண்டு இருக்கும்போதும் இதற்குக் காரணம் என்ன? பரிகாரம் என்ன? என்பதைப் பற்றிக் கவனிக்காமல் "இப்படியே செய்துகொண்டு வந்து பெரும் துன்பம்—தொல்லை அடைந்து வந்தால், பின்னால் பொதுஜன அபிப்பிராயம் பலப்பட்டு முதலாளிகள் மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டு, ஒரு காலத்தில் திடீர் என்று புரட்சி ஏற்படும்; அப்போது முதலாளிகள் ஒழிக்கப்பட்டு விடுவார்கள். ஆதலால் தோல்வி-துன்பம்-தொல்லை ஆகியவைகளைப் பற்றிக் கவலைப்படாமல் சதா அடிக்கடி வேலை நிறுத்தம் செய்யவேண்டும்" என்று உபதேசம் செய்து கொண்டே வந்தால், எப்படிப்பட்ட வேலை நிறுத்தத்தினாலாவது தொழிலாளிகளுக்கு அவர்கள் கருதும் விமோச்சனம் ஏற்பட்டுவிடுமா? என்று கேட்கிறோம்.

இந்த உபதேசம் எப்படி இருக்கிறது? என்றால் பாதிரிமார்கள் ஏழை மக்களைப் பார்த்து "ஓ பரிதாபத்திற்குரிய ஏழை மக்களே! உங்கள் ஏழ்மைத்தனத்தைப்பற்றி நீங்கள் சிறிதும் சிந்தியாதீர்கள்! இந்த ஜன்மத்தில் உங்கள் ஏழ்மையையும், கஷ்டங்களையும் பொறுமையோடு பொறுத்துக்கொண்டு நீங்கள் நாணயமாய்ப் பாடுபட்டுக்கொண்டே வருவீர்களேயானால், பரமண்டலத்தில் இருக்கும் பகவான் இவைகளைக் கவனமாய்ப் பார்த்துக் குறித்து வைத்து மேல் உலகத்தில் (அல்லது அடுத்த ஜன்மத்தில்) உங்களுக்கு மேலான வாழ்வை அளிப்பார்! செல்வவான்களைப் பழிதீர்த்து விடுவார்! அதாவது ஊசியின் காதில் ஒட்டகம் புகுந்தாலும் புகும், இந்தப் பணக்காரன் அதாவது உங்களைக் கசக்கிப் பிழிந்து கொள்ளை அடித்துப் பணம் சேர்க்கும் பணக்காரன், மோட்சத்திற்குப் போகமாட்டான் ஒரு நாளும் ஆனதால், பொறுமையாய் இருங்கள்! செல்வவான்களைப்பற்றிப் பொறாமைப்படாதீர்கள்!!" என்று உபதேசம் செய்வது போல் இருக்கிறது. இந்தப் பாதிரிகள் பணக்காரர்களின் ஏஜண்டுகள் என்பதை ஏழை மக்கள் உணருவதில்லை. அதுபோல்தான் இருக்கிறது இந்தத் தொழிலாளிகளை "நீ சதா வேலை நிறுத்தம் செய்து துன்பமும், தொல்லையும் அடைந்து கொண்டேவா, ஒரு காலத்தில் புரட்சி ஏற்படும்" என்று, இந்தப் புரட்சி வீரர்கள் சொல்லுவதும்.

இப்படிப்பட்ட வேலை நிறுத்த முறைகளினால் தொழிலாளிகளுக்கு இன்றைய நிலையில் கண்டிப்பாக எவ்வித நன்மையும் ஏற்படாது என்பது நமது தாழ்மையான கருத்தாகும். இந்தக் காரியத்தில் மேல் நாட்டை நம் நாட்டோடு ஒப்பிடுவது சுத்தப் பயித்தியக்காரத்தனமாகும். மேல் நாடு பகுத்தறிவு நாடு நம்நாடு மூடநம்பிக்கை நிறைந்த காட்டுமிராண்டி நாடாகும்.

இன்றைய வேலை நிறுத்தங்கள் பெரும்பாலும் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் தூண்டுதலாலும் அல்லது அந்த மனப்பான்மைக்காரரின் முயற்சித்த லைமையாலும் நடைபெறுபவையாகும். பொது உடைமைத் தத்துவம் வேறு. தொழில்சாலைத் தொழிலாளிகளின் கூலி உயர்வு, சவுகரியத் தேவை சம்பந்தமான வேலை நிறுத்தத் தத்துவங்கள் வேறு. இதற்கு அனுபவமும் பொறுப்பும் உள்ள தொழிலாளர் தலைவர்கள் வேண்டும். தொழிலாளர்கள் முதலாளித்துவத்தையே அடியோடு ஒழிக்காமல், தங்கள் சவுகரியத்தையும் நல் வாழ்வையும் பற்றி மாத்திரம் ஆசைப்படுகிறார்களா? அல்லது நாடு முற்றும் முதலாளி

தொழிலாளி, ஏழை சீமான், பிராமணன் சூத்திரன், கடவுள் பக்தன் என்கின்றதான பேதம்-பிரிவு இல்லாத தன்மை ஏற்படவேண்டுமென்று பாடுபடுகிறார்களா என்பதை முதலில் உலகத்துக்கும் தங்களுக்கும் தெளிவு படுத்திக் கொள்ளவேண்டும். இதில் குழப்பத்தை வைத்துக்கொண்டோ அல்லது மூடி வைத்து வேறு வேஷம் போட்டுக் கொண்டோ எந்த வேலையில் தொழிலாளிகள் இறங்கினாலும் அது தற்கொலையே ஆகும். இன்றைய தொழிலாளர்களின் வரிசைக்கிரமமான எல்லாத் தோல்விகளுக்கும் துன்பங்களுக்கும் இதுவே ஒரு முக்கிய காரணமாகும்.

இன்றைய கம்யூனிஸ்ட்டுகள், நம் நாட்டில் தொழிலாளர்கள் சங்கத்தாரால் தொழிலாளிகள் சந்தாவினால் இயக்க வேலையையும் சொந்த வாழ்வையும் நடத்துகிறவர்கள் ஆவார்கள். இவர்களுக்கு முக்கியம் தங்கள் இயக்க நடப்பும் வாழ்க்கை நடப்பும் நடந்து கொண்டே இருக்கவேண்டியதுதான் முக்கியமே தவிர, தொழிலாளிகளின் இன்றைய லட்சியமான கஷ்ட நஷ்டங்கள் குறைபாடுகள் தீரவேண்டுமென்பது முக்கியமல்ல. வேலை நிறுத்தங்கள் ஏற்படுவதால் கம்யூனிஸ்ட்டுகளுக்கு விளம்பரம் ஏற்படுகிறது என்பதைத் தவிர இதுவரை வேறு தொழிலாளர் நலம் எதுவுமே ஏற்படுவதில்லை. இந்த லட்சணத்தில் இன்றைய கம்யூனிஸ்ட்டுகள் அரசாங்கத்திற்குப் பாதுகாவலர்களாக இருக்கிறார்கள் என்பதோடு அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தக் கூடாது என்பதும், இந்த அரசாங்கம் முற்போக்குச் சக்திகொண்டது என்பதும், இன்றைய கம்யூனிஸ்ட்டுக்களின் சுலோகங்களாகும். அரசாங்கக் கொடி நிழலின் கீழிருந்து தொண்டாற்றித் தீரவேண்டிய நிர்ப்பந்தமுடையவர்கள், காந்தியாரை மகாத்மா என்பவர்கள். கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பார்ப்பனர். பார்ப்பனர் மாத்திரமல்லாமல் பண்டித நேருவுக்குப் பாதுகாப்பாளர். எந்தத் தேர்தலிலும் காங்கரஸ் தோல்வி அடையாமல் பார்த்துக்கொள்ளவேண்டியவர்கள். மத மூடநம்பிக்கைகளையும் கடவுள் பித்தலாட்டங்களையும், கடவுள் பேரால் நடக்கும் சுரண்டுதல்களையும், அடியோடு ஒழிக்கவேண்டுமென்றும், உலக வளர்ச்சிக்கே கேடான பார்ப்பனீயமும், பிராமணர் (பார்ப்பனர்) என்னும் பேரால் ஒரு சமுதாயப் பூண்டும் நாட்டில் இருக்கக்கூடாது என்றும் பேசி எழுதி அதற்கேற்ற காரியாதிகளைச்செய்துவரும் கட்சியை (திராவிட கழகத்தை) பிற்போக்குக் கட்சி என்று ''பிராமணர்''களுக்கு அனுகூலமாய் விஷமப் பிரசாரம் செய்து தொழிலாளிகளுக்குக் கேடுசெய்த, கருங்காலி வேலை செய்த-காங்கரசை முற்போக்குக் கட்சி என்று சொல்லி அதற்கு ஓட்டு வாங்கிக் கொடுத்தவர்கள், கொடுக்கிறவர்கள்—தாங்களும் ஓட்டுப்போட்ட கதர்ப் பக்தர்களாவர். இப்படிப்பட்ட இவர்கள் இந்தப் பாமர நாட்டில் இருப்பதால் வாழ முடிகின்றது என்னலாம். வேறு நாட்டில் இவர்கள் இந்த மாதிரி தொழிலாளிகளுக்குக் கேடு செய்யும் சர்க்காருக்கு ஆதரவு செய்வார்களேயானால் அதன் தன்மை வேறாக இருந்திருக்கும் என்போம்.

ஆதலால் பரிதாபத்துக்குரிய தொழிலாள மக்கள் கம்யூனிஸ்ட்டுகள் பேச்சைக் கேட்டுக் கொண்டு தங்களுடைய முக்கால்பாக எதிரிகளாகிய அரசாங்கத்தை விட்டுவிட்டு கால்பாக எதிரிகளாகிய முதலாளிகள் மீதே தங்கள் முழுபலத்தையும் செலுத்துவது பயனற்றதாக ஆகிவிடுகிறது. தொழிலாளிகளின் எதிர்ப்புச் சக்தி பெரிதும் வீணாகி விடுவதோடு இதில் அரசாங்கம் மிகவும் ''யோக்கியமான'' நிலையை அடைந்து தொழிலாளிக்கும் முதலாளிக்கும் மத்தியஸ்தம் செய்து சட்டம் சமாதானத்தைக் காப்பாற்றும் ''நிர்வாகபதி-நியாயாதிபதி''த் தன்மையை அடைந்து விடுகிறது. இன்றைய அரசாங்கத்திற்கு இவ்வளவு பலம் வந்ததற்கும் தொழிலாளிகள் விஷயத்தில் அரசாங்கம் இவ்வளவு கேடாக நடந்துகொள்ளும் தைரியம் ஏற்பட்டதற்கும் காரணம் இந்தக் கம்யூனிஸ்ட்டுகளும் இன்று அல்லல்படும் தொழிலாளிகளுமே ஆவார்கள்.

முதலாளி அரசாங்கத்தை எதிர்ப்பவர்களுடனும் தொழிலாளர்களுடைய உண்மையான நண்பர்களுடனும் சம்பந்தம் வைத்துக் கொள்ளாமல், அவர்களை நம்பாமல் தொழிலாளர் சந்தாவில் பிழைக்கும் கம்யூனிஸ்ட்டுகள் முதலியவர்களால் நடத்தப்பட ஏற்றுக்கொள்வதானது மிக மிகப் பைத்தியக்காரத்தனமான கேட்டைத் தேடிக்கொள்ளுவதாகும். இப்படிப்பட்ட ஸ்ட்ரைக்குகளால் உண்மையிலேயே அரசாங்கத்திற்கு அதிகபலம் ஏற்பட்டு விட்டது. இனியும் ஏற்பட்டுவரும். கம்யூனிஸ்ட்டுகள் பிரவேசத்தால் ஸ்ட்ரைக்குகளுக்குப்பொதுமக்கள் ஆதரவு கிடைப்பதற்கு இல்லாத மாதிரியில் ஸ்ட்ரைக்குகளால் பொதுமக்களுக்குச் சலிப்புகள் ஏற்பட வசதியும் ஆகி விட்டது.

நன்றாய்க் கள்ள மார்க்கட்டில் கொள்ளையடித்து மூட்டை கட்டி வைத்திருக்கும் முதலாளிகளுடன் வாதாடுவது என்பதும், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் அரசாங்கத்தை நெருக்குவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ளாமல், அவர்களை விட்டு வைத்துக் கொண்டு இருப்பது என்பதும், உற்பத்திக் குறைவினால் பொது மக்களுக்கு ஏற்படும் அசவுகரியத்திற்குச் சர்க்கார் தான் காரணம் என்பதைப் பொதுமக்கள் அறிந்து கொள்ள முடியாமல் செய்து தொழிலாளிகள்தான் காரணம் என்று தவறுதலாய்ப் பொது மக்கள் கருதும்படியாகச் செய்வதும் தொழிலாளிகள் நலனுக்கு ஏற்றவைகளாகாது என்பது நமது கருத்தாகும்.

ஆதலால் ''அடுத்த ஜன்மத்தில் பயனடையலாம்'' என்ற தத்துவத்தை விட்டு விட்டு ''இந்த ஜன்மத்திலேயே பயன் ஏற்படும்படியான காரியத்தை அதற்கு ஏற்ற அறிஞர்களைக் கொண்டு காரியங்கள் செய்து வெற்றி பெற வேண்டும் என்று ஆசைப்படுகிறோம்.

## மறைவு

மறைந்த திராவிடத் தளபதி சர். ஏ. டி. பன்னீர்ச் செல்வம் அவர்களின் மூத்த மகளின் புதல்வர் தோழர் எஸ். செல்வம் அவர்கள் 23-1-48ம் நாள் தம் 22வது வயதில் மறைந்தார் என்பதையறிந்து பெரிதும் வருந்துகிறோம்.

## திருச்சி கலக்டர்!

மிராசுதாரர்கள் உணவு உற்பத்தியை அதிகப்படுத்துவதன் மூலம் சேவை செய்ய வேண்டும். முடியா விட்டால் ஆதிதிராவிடர்களுக்கு ஒரு திண்ணைப்பள்ளிக்கூடத்தையோ அல்லது ஒரு சர்க்கா சங்கத்தையோ ஆரம்பித்துச் சேவை செய்யுங்கள் என்று கலக்டர் வி. வி. சுப்பிரமணியம் கூறுகிறார்.

# ஏனோ இந்த சுயராஜ்ஜியம்?

(நைந்த மாணவன்)

"என்னங்க! எஜமான்! இந்த மாசம் எப்படியாச்சும் ஒரு நாலு மரக்கா நெல்லுக்கொடுங்க! இன்னும் சரியா எழுந்து நடக்கக்கூட முடியவில்லை. ஒத்தாசை செய்தால்ஆண்டையை அடியேன் மறப்பேனுங்களா?"

"என்னடா கேக்கிறாய்? போன மாசம் முழுதும் வேலைக்கு வரவே இல்லை நீ. தண்ணீர் இறைக்காமே இட்ட பயிர் இடுகாட்டிற்குப் போகும் போல் இருக்குது. இப்ப என்ன ஒத்தாசைடா? என்னடா உடம்புக்கு?"

"இல்லை எஜமான்! போனமாசம் சந்திதோஷம்னா, நான் பிழைத்ததே அந்த மாரியாத்தா தயவிலே தான் பிழைத்தேன். வீட்டிலே என்னை நம்பி இருக்கும் குழந்தைகளின் பட்டினியைப் பார்க்க முடியல்லைங்க. கொஞ்சம் தயவு செய்தா.........பிறகு வந்து வட்டியும் முதலும் கொடுத்திடுறங்க. ரொம்பக் கஷ்டம்........."

"எனக்குக்கூட அப்படித் தாண்டா இருக்குது. சரியான விளைவோ கிடையாது. அந்த எழவு முனுசீப் வரிக்கு வதைக்கிறான். முன்னேயே பத்து ரூபாய்க்கு மேலே பெண்டாட்டி பிரசவத்தின்போது வாங்கினே. இன்னும் கொடுக்கவில்லை. ஆளோ இப்போவேலைக்குவரமுடியாது. ஆகவே புது ஆள் தேடுவதற்குக் குறைந்தது இருபது ரூபாயாகிலும் கொடுத்தால் தான் வருவான். ஆகவே தொந்தரவு செய்யவேண்டாம்."

"அப்படின்னா எப்படி எஜமான்? ஏழை!"

"என்னை என்ன செய்யச் சொல்றேடா?"

"என்னங்க மாதம் இருபத்தேழு படி நெல்லுக்கு மாடா உழைத்தவன் நான். இன்னும் ஒங்க காலுக்குச் செருப்பா உழைக்கக் காத்திருக்கிறனுங்க. நான் சீக்காய்ப்படுப்பதற்கு மொதநாக்கூட ஒப்படி செய்து தானுங்களே சென்றேன். எஜமான் தயவு செய்யுங்க சக்தி இருந்தால் வேலைக்கு வரமாட்டேனா? மாரியாத்தா அறிய வஞ்சகமில்லேங்க."

"ஊம் பார்க்கலாம்!"

* *

இது நாட்டுப்புறத்தில் ரங்கசாமி ரெட்டிக்கும் கந்தனுக்கும் நடந்த உரையாடல். பிணி, வறுமைக்காளான குழந்தைகள், இவற்றின் நடுவில் சிக்குண்டு வாடித்தவிப்பவன் கந்தன். மேலும் செல்வத்தைத் திரட்டத் திட்டமிடுபவர் ரங்கசாமி ரெட்டியார்.

* *

இதோ அதே உரையாடல் வேறு முறையில்.

"சார், நான் ஹரிஜன் சார்! கடந்த ஆறுவருடங்களாக ஆட்சியாளரின்ஆதரவால் சம்பளத்தைத் தந்து படித்து வந்தேன் சார்! இந்த ஆண்டு (1947) செலக்ஷனில் தேறி எஸ். எஸ். எல். சி. பரீட்சைக்குச் சென்று, அங்கு தேர்தல் கிடைக்காது திண்டாடுகிறேன் சார். நான் படிக்கத் தொடங்கி இதுவரையிலும் பெயில் என்பதே கிடையாது. இப்போது இந்த ஆண்டு மறுபடியும் படிக்கலாமென்று இந்தப் பள்ளியில் சேர்ந்திருக்கிறேன்."

"அதற்கு?..........."

"அரைச் சம்பளத்திற்கு அனுமதி வேண்டும்"

"அரைச் சம்பளமா! அதற்குமுன் பெற்று வந்தாயா?"

"ஆம் சார்"

"நீ இதற்கு முன் எந்த வகுப்பிலாகிலும் பெயிலாகி இருக்கின்றாயா?"

"இல்லை சார். இதுதான் முதல் தடவை."

"அப்படியானால் கவனிக்கிறேன். நீ பத்து நாட்கள் பொறுத்து வா!"

இந்த ஆண்டு (1947) ஆகஸ்டு மாதம் தலைமையாசிரியருக்கும், படிக்க யாதொரு வசதியுமின்றி ஒரு வகுப்பில் வழுக்கி விழுந்த ஏழை ஆதித்திராவிட மாணவனுக்கும் நடந்த உரையாடல் இவை.

(மறுமாதம்)

"என்ன சார் கவனிக்கிறேன் என்றீர்களே"

"அப்பா ரைட்டர்! இவன் ஹரிஜனாம்! ஆறாம் பாரமாம்! இவனுக்கு அரைச் சம்பளத்தைப்பற்றி கொஞ்சம்..........."

ரைட்டர் (எதையோ எடுத்துக் கொண்டு "சரிதான் சார்"

"நான் சொல்லியிருக்கிறேன். பார்த்து அவர் உனக்குச் சொல்லுவார். போ!"

"சார்! நான் ஏழை. எங்கப்பா கை வண்டி வலிக்கிறார். சம்பளம் கட்ட ரொம்பவும் கஷ்டமாய் இருக்கிறது. கொஞ்சம் தயவு செய்யுங்கோ."

"சரிதான் சொன்னேனே; போப்பா."

பதில் எவரிடமும் இல்லை. விண்ணப்பம் (application) தலைமை ஆசிரியருக்கும், ஜில்லாக் கல்வி அதிகாரிக்கும் அனுப்பி வைத்தாச்சு. தலைமை ஆசிரியர் விண்ணப்பத்தை வாங்கினார்; பிரித்தார்; வாசித்தார்; மேஜையின்மேல் வைத்தார்.

பிறகு ஒருநாள் மாணவனைப் பார்த்து "நீதானா விண்ணப்பம் கொடுத்தது?'பார்க்கிறேன்"

"மாதம் அஞ்சுக்கு மேல் ஆகிறது சார் பள்ளி திறந்து. மாதம் பத்து ரூபாய் கட்ட முடியவில்லை. தயவு செய்யுங்க சார்!"

* *

பள்ளியில் வாசிக்கும் ஏழை ஆதித்திராவிட மாணவனான கன்னியப்பனுக்கும், பிள்ளைகளின் தகப்பனார் என மதிக்கப்படும் முத்தியாலுப்பேட்டை உயர் நிலைப்பள்ளி ஆசிரியருக்கும் நடந்த உரையாடலின் பின்பகுதி இவை.

இரண்டின் முடிவுகள் இதோ!

கந்தன் பத்துத் தினங்களுக்குப் பிறகு திரும்பி வரவில்லை. உழைத்துப் பலஹீனப்பட்டவன். நோய் வாய்ப்பட்டுச் சிறிது தேறிவந்து உதவி கோரினால், இரத்தத்தை உறிஞ்சிய ரெட்டியாரின் போக்கோஒத்தாசை செய்வதாக இல்லை. ஆகவே பிணிபிடித்த அவன் மேலும் பசிப் பிணிக்கு இலக்காகி உயிர் விட்டான்.

* *

அதே முடிவு இதோ தருகிறேன். யோசித்துத் தீர்ப்பளியுங்கள் உத்தமர்களே!

ஏழைக் குடும்பம். படிக்க வசதியோ கிடையாது. இருப்பதோ பொத்தல் குடிசை. இரவில் படிக்கவோ எண்ணெய் கிடையாது. காரணம் குடிசை வீடு. ரேஷன் பிரகாரம் ஒரு புட்டி எண்ணெய் பதினைந்து தினங்களுக்கு. ட்யூஷனோ நினைக்க முடியாதது. இத்தகைய இன்னலில் திறமையுடன் கூடுமானவரையில் சுமாராகப் படித்து, எஸ். எஸ். எல். சிக்கு வந்து நோய்க்கு இலக்காகி, அப்பொழுதும் எஸ். எஸ். எல். சி. பரீட்சைக்குச் சென்று ஒருமார்க்கு தேவையென்பதால், தோல்வியைக் கண்ட மாணவன், மறுபடியும் பள்ளியில் சேர்ந்து படிக்க ஆவல்கொண்டு, 92. எம். இ. ஆர். என்ற அரசாங்க உதவி, பள்ளியில் ஒரு முறை பெயில் ஆனவர்களுக்கும் உண்டு என்ற எண்ணம் கொண்டு, தலைமை ஆசிரியரைப் பல தடவை அதற்காகக் கேட்டு, "பார்க்கிறேன்" என்ற பதிலைப் பெற்று ஆறுமாதம் சம்பளமும் கடன் வாங்கிச் செலுத்தி ஏழாம் மாதம் (டிசம்பர் பீஸ்) கொடுக்கச் சக்தியின்மையால், அவன் முயற்சி தோற்று பள்ளியினை விட்டுப்படிப்புக்குத் தலைமுழுக்குப் போட்டுவிடுகிறான் அம் மாணவன். அவன் படித்த படிப்பு உதவியின்மையால் முற்றுப்புள்ளிக்கு இலக்காகிறது.

* *

இது யார் ஆட்சியில்? வறுமையின் எண்ணம் தெரியாத பறங்கியின் ஆட்சியிலா?

இல்லை. பாரதமாதாவின் தவப் புதல்வர்கள் ஆட்சியில்.

உலுத்தர்கள் ஆட்சியிலா? இல்லை. உத்தமர்கள் ஆட்சியில்? இந்தியாவை மதியாத வெள்ளையரின் ஆட்சியிலா? இல்லை.

"ஏழை என்றும் அடிமை என்றும் எவனும் இல்லை ஜாதியில்" என்று வீர முரசு கொட்டி மக்களின் உதவியால் ஆங்கிலேயன் ஆட்சியை மாற்றி அங்கு வீற்றிருக்கும் நமது தியாகிகளின் ஆட்சியில்.

இவர்கள் ஆட்சியில் ஏழைகளுக்குப் பெரும்பாலும் ஹரிஜனங்களுக்கு வழி வகுக்க வில்லையா? அப்படி நினைக்கக்கூடாது; ஹரிஜன் அப்லிப்ட்!! என்கின்றனர்.

லிப்டா? யாருக்கு? வழுக்கிவிழுந்து வாடி வதங்கும் கூட்டத்தாருக்கு மகாத்மா பக்தர்களால் அதன் உதவியைக் கொண்டு முன்னேறுவதற்குக் கொடுக்கும் ஏணிதான் அந்த அப்லிப்ட்.

ஏம்பா! பள்ளியில் இருக்கும் பயல் வழுக்கி விழுந்தது, உதவி கோரியது, அதை அவர்கள் கொடுக்க மறுத்தது, ஆட்சியாளருக்கு எப்படித் தெரியும்?

தெரியாது விடு!

இதோ மற்றொன்று எடு!

* *

ஹரிஜனங்கள் தண்ணீருக்குப்படும் கஷ்டம் கொட்டை எழுத்தில் பாரத தேவியில் வெளிவந்த வாசகம். இது ஆட்சியாளர்கள் கண்களில் பட்டிருக்காதா? மக்கள் தண்ணீர் இன்றிக் கஷ்டப்படுகிறார்கள். இது பாரத தேவியில் வெளிவந்து சுமார் ஒரு ஆண்டுக்கு மேல் ஆகிறது. ஏன் இன்னும் வழி வகுக்கப்படவில்லை? ஹரிஜன் அப்லிப்ட் எங்குள்ளது? ஓட்டும் ஆள் தூங்குகிறாரா? அல்லது இயந்திரம் பழுதா? அல்லது கம்பெனியில் கண்கட்டி வேலை நடக்கிறதா? அறிய விரும்புகிறார்கள், ஆவன செய்து எங்களைச் சுதந்தர இந்தியாவில் ஆட்கொள்வீர் என்று எதிர்பார்த்த ஏழைகள்.

ஆட்சியாளரின் மீது குறைகூறும் அப்ப! மக்கள் அரிசியில்லாது படும் அல்லல் தெரியாது பிதற்றுகிறாய். முழுமூச்சும் ஆட்சியாளருக்கு அதில் தானே. அதை விட்டுச் சிறிது ஓய்வு நேரம் கிடைத்தால் ஒரே ஸ்ட்ரைக் தொல்லை. அதைத் தவிடுபொடியாக்கவேண்டிய வேலை. அதிலும் மிஞ்சியநேரம் இருந்தால் அந்நேரத்தில் மற்ற கட்சியினை மண்ணாக்குவதற்குத் திட்டம் தயாரிக்கும் பணி. இவ்வளவையும் விட்டு எப்படியப்பா ஏழைதுயர் காணமுடியும்? எனலாம்.

அது போகட்டும் இதைப்பார்!

(தொடரும்)

[7ம் பக்கத் தொடர்ச்சி]

இலவசம். மோட்டார்கார் சர்க்கார் செலவில். ஆனால் காருக்காகவும், டிரைவருக்காகவும் ஆகக்கூடிய மேற்செலவுகள் பிரதிநிதியைச் சேர்ந்தவை.

ரோஜா முத்தையா

### 12. சர் R. P. பராஞ்சிபை.

ஆஸ்திரேலியாவிலுள்ள இந்திய ஹைகமிஷனரான சர் R.P. பராஞ்சிபைக்கு ஆண்டுச் சம்பளம் 2,250 பவுன். தளவாடச் சாமான்கள் வாங்கக் கொடுத்தது 250 பவுன். படி 700 பவுன் ஆண்டொன்றுக்கு காருக்காகவும் டிரைவருக்காகவும் ஆண்டுக்கு 400 பவுன் (கார் சர்க்கார் செலவு) இலவச வீடு.

### 13 தோழர் H. S. மாலிக்.

கானடாவிலுள்ள இந்திய ஹைகமிஷனர் தோழர் H. S. மாலிக்குக்கு மாதச் சம்பளம் ரூ 2,250 பிரதிநிதிப்படி வருஷத்துக்கு 10,000 பவுன். காரும் டிரைவரும் சர்க்கார் செலவு. நிர்வாகச் செலவு அவரையே சார்ந்தது. விடுதி இலவசம்.

### 14. தோழர் M. A. ரவூப்.

பர்மாவிலுள்ள இந்திய ஹைகமிஷனர் டாக்டர் M. A. ரவூப் அவர்களுக்கு மாதச் சம்பளம் ரூ. 2,750 அலவன்ஸ் மாதம் ரூ. 750 சர்க்கார் செலவில் காரும், அதன் செலவுகளுக்காக மாதம் ரூ. 250 படியும். வீட்டு வாடகைக்காக சம்பளத்தின் மேல்10%. வாழ்க்கை நடத்துவதற்காகப் படி ரூ. 300.

### 15. தோழர் பிரகாசா.

பாக்கிஸ்தானிலுள்ள இந்திய ஹைகமிஷனர் தோழர் ஸ்ரீ பிரகாசாவுக்கு மாதச் சம்பளம் ரூ.2500 இதர செலவுகளுக்காக ரூ. 500. இலவச விடுதியும், காரும்.

### 16. தோழர் J. A. தீவி.

மலேயாவிலிருக்கும் இந்தியப் பிரதிநிதியான தோழர் J. A. தீவிக்கு மாதச் சம்பளம் ரூ.2,250. மற்ற அலவன்ஸ் ரூ 1,000 மாதா மாதம். கார் அலவன்ஸ் ரூ 125; வீட்டுவாடகை அலவன்ஸ் ரூ 150. வாழ்க்கை நடத்தச் செலவுக்காக ரூ 350.

### 17. தோழர் V .V. கிரி.

இலங்கையிலுள்ள இந்தியப் பிரதிநிதி தோழர் V. V. கிரிக்கு மாதச் சம்பளம் ரூ 2,250 அலவன்ஸ்ரூ 1,000. கார் சர்க்கார் செலவில் அளிக்கப்பட்டிருக்கிறது.

### 18. தோழர் சர்ஜித் சிங்

நேபாளத்தில் பிரதிநிதியாக நியமனம் பெற்றுள்ள தோழர் சர்ஜித் சிங் மஜீதியாவுக்கு மாதச் சம்பளம் ரூ 2,250. பிரதிநிதிப்படி ரூ 750. இலவச விடுதி. டிரைவர், கிளீனருடன் கார் சர்க்கார் செலவில். நிர்வகிக்கும் செலவு அவரையே சேரும். நேபாளப் பிரதிநிதியின் செலவுகளுக்காக ஆண்டுக்கு ரூ 52,000 திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், இந்திய சர்க்கார் தோழர் M. தீருபாய் தேசாயை ஸ்விட்சர்லாந்திலும், சர் ராகவன் பிள்ளையை பிரான்சிலும், டாக்டர் சையத்ஹுசைனை எகிப்திலும், டாக்டர் தாராசந்தை ஆப்கானிஸ்தானத்திலும், B. F. தயாப்ஜீயை பெல்ஜியத்திலும் பிரதிநிதிகளாக நியமிக்கத் தீர்மானித்திருக்கின்றனர். இந்தப் புதிய நியமனங்களின் மூலம் செலவு 3,25,000 ரூபாய்க்கு மேல் போகாதெனத் தெரிகிறது. ஹாலந்து, செக்கோஸ்லொவாகியா, துருக்கி ஆகிய நாடுகளுடனும் உறவு உண்டாக்கிக் கொள்ள முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கனவே ஹாலந்து தன் பிரதிநிதியை இங்கு அனுப்பி விட்டது.

இந்த அயல்நாட்டு உறவின் காரணமாக இந்திய சர்க்காருக்கு 1948-49 ம் ஆண்டில் உத்தேசமாக 12 கோடி ரூபாய் ஆகும் என்று தெரிகிறது.

இந்தியா ஏழை நாடென்று 'சுதந்தரம்' பெறுமுன் கூறிவந்த புரட்டு இப்போதுவெளிப்பட்டது. உண்மையில் செல்வமும், வளமுமிக்க நாடான கானடா கூட இந்தியாவைப்போல் இவ்வளவு பிரதிநிதிகளை ஏற்படுத்தவில்லை. உள்ளபடியே நாம் சர்வதேச வியாபகம் பெற்று வருகிறோம். எனினும் இந்தியாவில் வாழும் ஏழை மக்களின் கதியாது?

16—2—48 முதல் வெளிவரும்.

'சிந்தாமணி''

திங்கள் இருமுறை தோன்றும்.

நடுநிலைமைத் தமிழ்ச் செய்தி இதழ்.

ஆண்டு சந்தா 3. ரூ. தனிப்பிரதி 2 அணா. விற்பனையாளர்களுக்கு 25/ கமிஷன் தரப்படும். விளம்பர விகிதங்கள் மிகவும் குறைவு.

விபரங்களுக்கு:-சிந்தாமணி நிலயம்,
73. ஜாப்பர்சா தெரு,
திருச்சினாப்பள்ளி.

[4ம் பக்கத் தொடர்ச்சி]

வாணிபத்தால் வளம் பெற்றனர். ஆனால் இன்று நீ பயன் படுத்தும் வாசனைப் பொருள்களனைத்தும் வடநாட்டுப் பனியாக்களுடையது. கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி. என்று பெருமையடைகிறாய். ஆனால் இன்று உனது நாட்டின் கப்பல் வாணிபம் வடநாட்டுப் பனியாக்களிடம் சிக்கியிருக்கிறது. உனது நாட்டின் செல்வமனைத்தும் வடநாடுசென்று குவிகின்றது. அங்கேயுள்ள குப்பை மேடுகள் ஒரு சில ஆண்டுகளில் மாடமாளிகை,கூடகோபுரங்களாகக்காட்சியளிக்கின்றன. ஆனால் இங்கேயிருந்த மாடமாளிகைகளெல்லாம் மறைந்து குப்பை மேடாகி விட்டன. உனது வளமிருந்த நாட்டின் செல்வ ஊற்றுத் தண்ணீரை ஆழமாக உறிஞ்சி வடநாட்டன் மேலும் மேலும் வளர்கின்றான். ஆனால் நீ நாளுக்கு நாள் தளர்ந்து, சோர்ந்து வருகின்றாய். உன்னிடமிருந்து அனைத்தும் போய் விட்டன. உனது செல்வம் பறிபோய் விட்டது. உனது நாகரீகம் இரவல் வாங்கப்பட்டு விட்டது. மீதியிருப்பது உனது உடலும் உயிரும்தான், அதுவும்கூட வடநாட்டானின் தயவில் இருக்கிறது'' என்று நீ அறிந்தும் இந்திய உபகண்டத்தின் மக்கள் அனைவரும் உடன் பிறந்தோர் என்று எண்ணும்படி செய்து விட்டது. உடன்பிறந்தோராகையால் உயிர் போகுமளவும் வடநாட்டானுக்கே உழைப்பது என்ற உறுதியை உனக்கு உண்டாக்கிற்று அந்த அகண்ட இந்தியா என்னும் அபின்.

ஆரியம் கலந்த அகண்ட இந்தியா என்ற அபினுடைய போதையின் தன்மையை எங்கள் பெரியார் எடுத்துக் காட்டுகிறார் கேள் தேசியத் திராவிடனே! உனது இனத்தின் முன்னேற்ற வளர்ச்சிக்கான ஆணிவேர், மூலாதாரம், சின்னாபின்னமாக்கப்பட்டுக் கிடப்பதை அறிந்து கொள். அன்று உன் இனத்துக்காக, உனது மக்கள் கூலிக்கு வெளி நாடுகளுக்குப் போகக் கூடாது, மூட்டை சுமந்து கொண்டிருக்கக் கூடாது, வேலையற்ற சோம்பேறிகளாக இருக்கக் கூடாது, வாழ்நாள் எல்லாம் ஏழையாகவே இருக்கக் கூடாது என்பதற்காக எங்கள் பெரியார் வகுப்புவாரி உத்தியோக நியமனத்தையும், பிரதிநிதித்துவத்தையும் கடும் போரிட்டு உனக்கு வாங்கிக் கொடுத்தார். அதன் பயனாகவே உனது மக்கள் இன்று மேல் படிப்புக்கும், மேல் உத்தியோகங்களுக்கும் செல்ல முடிகிறது. மந்திரிகளாக வரமுடிந்தது. வகுப்புவாரி நியமனம் ஏற்பட்டும் கூட நீ ஆரிய அடிவருடியாக இருப்பதனால் 100க்கு 3 இடம் பெறவேண்டிய ஆரியப் பார்ப்பனர்கள் 100க்கு 97 இடம் பெற்றுவிட்டனர். ஆனால்உனது தேசியத்தின் சூழ்ச்சியால் இனி உன் மக்கள் மந்திரிகளாக வரமுடியாது, மேல் பதவிகளுக்குச் செல்ல முடியாது. அந்த வகுப்புவாரி நியமனம் ரத்து செய்யப்பட்டதால், இனி ஆரியர்களே உத்தியோக வேட்டையில் வெற்றிபெறுவர். சமீப காலமாக ஆரியர்களுக்கே மேற்பதவிகள் கொடுக்கப்பட்டு வருவதைக் காண்கிறாய். இனி நீ என்றென்றும் ஆரியத்திற்கு அடிமையாக இருக்கவேண்டும் என்ற நிலை ஏற்பட்டு வருகிறது. உனது இனமக்கள் பழயபடி கூலிக்கு உழைக்க வேண்டும். பிச்சை யெடுத்துத் திரியவேண்டும். பர்மா, மலாய், மோர்சு நாடுகளுக்குச் சென்று அங்கும் அடிமை வாழ்வு நடாத்த வேண்டும். கல்வியற்ற பாமரராக வேண்டும். ஆரிய ஆதிபத்தியம் இனி தலைவிரித்தாடப்போகிறது. உனது மொழிக்கும், கலைக்கும், வாழ்வுக்கும், உரிமைக்கும்ஆபத்து நெருங்குகிறது. இவ்வாறு எங்கள் பெரியார் உள்ளம் உருகி, மனக் கொதிப்புடன் உன் மக்களையும், சந்ததியாரையும் காப்பாற்றவேண்டுமே என்ற ஏக்கத்துடன் கூறுகிறார் தேசிய அபின் உட்கொள்ளக் கூடாது என்று. ஆகையால் தேசியத் திராவிடத் தோழனே இனியாகிலும் தலைநிமிர்ந்து பார். சிந்தனை செய்து பார். அகண்ட இந்தியா என்ற அபின் வாழ்வைக் குலைத்துக் கெடுக்கக் கூடியது என்று உணர்ந்து கொள். அந்த அபினை உட்கொண்டால் நீ என்றென்றும் வடநாட்டானுக்கும், பார்ப்பனீயத்திற்கும் அடிமைப்பட்டு ஏழையாகவும், வடவனும், பார்ப்பனனும் முதலாளிகளாகி வரவும் ஏற்படுகிறது என்று அறிந்து அந்த அபினை அகற்று.

உனது நாடு வளம்பெறவேண்டுமானால், உனது மக்கள் முன்னேறவேண்டுமானால், உனது இழந்த புகழை, நாட்டை, செல்வத்தைத் திரும்பப்பெற வேண்டுமானால் நீ திராவிட நாட்டைப் பிரிக்கப் புறப்பட வேண்டும். திராவிட நாட்டைப் பிரிக்கப் போர் தொடுக்கும் சேனையில் சேரவேண்டும். தன்மான உணர்ச்சியுடன் ஆரியத்தையும், வடநாட்டு ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்துப் போராடி முறியடிக்க வேண்டும். உனது வாழ்வின் முன்னேற்றம் விடுதலைப்போரின் வெற்றியில் உள்ளது.

விடுதலைப் போருக்கான முரசு கொட்டப்பட்டு விட்டது. திராவிட நாட்டை விடுவிக்கப் புறப்படும் கருஞ்சட்டை வீரர்கள் அணி வகுத்து நிற்கின்றனர். அவர்கள் செல்ல வேண்டிய பாதை மலர்ப்பதை யன்று. ஆரியமென்ற நச்சரவத்தின் குட்டிகள்வழிநெடுகப் படமெடுத்து ஆடுகின்றன. வடநாட்டு வாணிப ஏகாதிபத்தியமென்ற பொல்லாத புலி, கரடி, சிங்கங்கள் குமுறுகின்றன. தேசீயமெனும் முட்பாதை எதிரில் காட்சியளிக்கிறது. கடவுள், மதம், சாத்திரம் எனும் இருள் சூழ்ந்து வருகிறது. இவையனைத்தையும் பொருட்படுத்தாமலேயே திராவிட வீரர்கள் அணி வகுத்து நிற்கின்றனர் சிங்கங்களென. படையின் தலைவர் தருணம் பார்த்து நிற்கின்றார். தளபதி ஆணையிடத் தலைவரது கட்டளையினை எதிர்பார்த்திருக்கிறார். கட்டளை பிறந்ததும் களம் புகுவர் வீரத்திராவிடர்கள். ஆகையால் தேசீயத் திராவிடனே நன்றாகத்தலைநிமிர்ந்து பார்உணர்ச்சியுடன். கணக்கிலடங்காதகருஞ்சட்டை வீரர்கள்உன் கண் எதிரில் அணி வகுத்து நிற்பதைப் பார்! உனக்கும் படையில் சேர்ந்து விடுதலைப் போரில் இறங்கலாமா என்ற எண்ணம் மனதிலே உதிக்கிறது. ஆனால் தேசீயப் போதையால் அந்த எண்ணத்தையும் மறந்து நிற்கிறாய். என் அருமை தேசீயத்திராவிடனே! தேசீய மதுக் கிண்ணத்தை உடைத்தெறிந்து விட்டு, அக் கையில் பகுத்தறிவு வாளை ஏந்தித் திராவிட நாட்டின் விடுதலைப் படையில் சேர். போர் புரிந்து உன்னையும், உன் நாட்டையும் விடுதலை செய்து கொள். உனது இழந்த இன்ப வாழ்வையும், புகழையும் மீண்டும் தரணியிலே நிலைநாட்டுவாய்!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

னர். ஆனால் சோவியத் ருஷ்ய மக்கள் தங்களுடைய தேசத்தை மாத்திரமல்ல, கலைகளையும் காப்பாற்றும் பொருட்டுத் தியாகங்களைச் செய்யத்தயாராக இருக்கின்றனர்.

### அன்று கல்லாதவர்கள். ஆனால் இன்றோ?

புரட்சி ஏற்படுவதற்கு முன்னர் ருஷ்யா மக்களிற் பெரும்பாலர் கல்வி மணம் வீசப் பெறாதவர்களாகவே இருந்தனர். அவர்கள் "அ" என்ற எழுத்தை எழுதச் சொன்னால் யானையின் படத்தை வரைந்து காட்டுவார்கள். இந்நிலைமையிலிருந்த சோவியத் ருஷ்ய மக்கள் இப்பொழுது சிறந்த அறிவாளிகளாகத் திகழ்கின்றனர். அவர்கள் நாடகத்தின் இயல்புகளையும், இலக்கியத்தின் ரகசியங்களையும் நன்கு அறிந்திருக்கின்றனர். இலக்கிய நூல்களை அவர்கள் பெரும்பணம் கொடுத்து வாங்கத் தயாராக இருக்கின்றனர். அவர்களுடைய இலக்கிய அறிவை அபிவிருத்தி செய்வதற்குச் சோவியத் அதிகாரிகள் அவர்களுக்கு உதவி புரிந்து வருகின்றனர்.

### காலந் தப்பினால் கதவு மூடப்படும்.

மாஸ்கோ நகரத்திலுள்ள தியேட்டர்கள் சரியாக மணிக் கணக்குப் பிரகாரம் சினிமாக் கதைகளையும், நாடகக் கதைகளையும் காட்டத் தொடங்கி விடுகின்றன. ஒரு நிமிஷம் பிந்தி வந்தாலும் ஒருவரும் தியேட்டர்களில் அனுமதிக்கப்படமாட்டார்கள். இது காரணமாக அனைவரும்மணிப்பிரகாரம் சரியாகத் தியேட்டர்களுக்கு வந்து விடுகின்றனர்.

### அறிவையும் வாழ்வையும் அடிப்படையாகக் கொண்டது சினிமா.

மேனாடுகளில் பெரும்பாலானவற்றில் தியேட்டர்களின் சொந்தக்காரர்கள் தங்களுடைய இஷ்டம்போல் ஆபாசமான கதைகளைக் காண்பித்துப் பொதுஜனங்களின் பணத்தைச் சூறையாடிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் மாஸ்கோ நகரத்தில் தியேட்டர்கள் யாவும் சோவியத் சர்க்காரின் மேற்பார்வையிலேயே இருக்கின்றன. பொதுஜனங்களின் அறிவையும், தினசரி வாழ்க்கையையும், அபிவிருத்தி செய்யத்தகுந்த கதைகளையே காட்டுவதற்குச் சோவியத் அதிகாரிகள் அனுமதி வழங்குவார்கள்.

### நடிகர்களின் சம்பளம்.

நாடகத்திலும், சினிமாவிலும் நடிப்பவர்களுக்கு வாரமொன்றுக்கு ஆயிரக்கணக்கான பவுன்கள் ஹாலிவுட் நகரத்தைப் போல கொடுக்கப்படவில்லை. நடிகர் நடிகைகளின் சம்பள விகிதங்கள் யாவும் கட்டுப்பாடுசெய்யப்பட்டிருக்கின்றன. வாரமொன்றுக்கு 100 பவுனுக்கு அதிகமாகச் சம்பளம் பெறும் நடிகர்களேனும், நடிகைகளேனும் மாஸ்கோ நகரத்தில் கிடையாது. சோவியத் அதிகாரிகள் தங்களுடைய பிரஜைகளின் அறிவு வளர்ச்சிக்கும் பொழுதுபோக்குக்கும் தியேட்டர்களே பொறுப்பானவையென்று அபிப்பிராயப்படுகின்றனர். இதர நாடுகளில் தியேட்டர்கள் உல்லாசப்பொழுது போக்கிற்காக அமைக்கப்பட்டிருக்கும் நிலையங்களாகக் கருதப்படுகின்றன. ஆனால் சோவியத் அதிகாரிகள் தியேட்டர்களை அறிவுவளர்க்கும் நிலையங்களாகக் கருதுகின்றனர்.

### சிறுவர்க்குத் தனித் தியேட்டர்கள்.

சோவியத் ருஷ்யாவின் வருங்காலம் அதன் சிறுவர்களையும், சிறுமிகளையும் பொருத்திருக்கின்ற தென்பதைச் சோவியத் அதிகாரிகள் நன்கு அறிந்திருக்கின்றனர். சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்கும் பிரத்தியேகமாகத் தியேட்டர்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இத்தியேட்டர்களில் எப்பொழுதும் வேடிக்கையான கதைகளும் உயர்ந்த கருத்துகளடங்கிய நாடகங்களும் காண்பிக்கப்படுகின்றன. தினந்தோறும் ஆயிரக்கணக்கான குழந்தைகள் மேற்கூறிய தியேட்டர்களுக்கு விஜயம் செய்கின்றனர்.

### சினிமா வளர்ச்சிக்குக் கல்லூரிகள்.

தியேட்டர்களில் நடிப்பதற்கும், அவற்றின் நிர்வாகஸ்தர்களாவதற்கும், நாடகக் கதைகளையும், சினிமாக்கதைகளையும்எழுதுவதற்குப் பயிற்சி கொடுப்பதற்கும் மாஸ்கோ நகரத்தில் கல்லூரிகள் இருக்கின்றன. இக்கல்லூரிகள் யாவும் சோவியத் சர்க்காரின் ஆதரவிலேயே நடைபெறுகின்றன.

[ஆபாசமான அறிவுக்கொவ்வாத கதைகளைப் படமெடுப்பதும் நாடகங்களாகச் சித்திரிப்பதும், ஏழை மக்கள் பொருளைக் கொள்ளையடிப்பதையே முதல் நோக்கமாகக்கொண்டதாகும் என்ற இந்நாட்டு நிலையோடு சேர்த்து எண்ணத் தகுந்தது. ஆர்.]

[2ம் பக்கத் தொடர்ச்சி]

கருஞ்சட்டையினரிடம் அகப்பட்டுக் கல்லுடைப்பதிலிருந்து செக்கிழுப்பது வரை நாங்கள்தானே செய்யவேண்டும். அன்று ராவணனிடம் அகப்பட்டுவிழித்தது போதாதா? அவனைவிட ஆயிரம் மடங்கு முன்னேற்றக் கருத்தைக் கொண்டவர்களாயிற்றே இவர்கள். அவனாவது செய்துகொண்டிருக்கும் யாகத்தை அழித்தான். இவர்கள் யாகம் செய்யவே விடுவதில்லையே. செய்யநினைக்கக்கூட முடியவில்லை"

"தேவ தேவா! ஏன்விழிக்கிறாய்? நீ விழிப்பதிலிருந்து இன்னும் நீ விஷயத்தைப் புரிந்துகொள்ளவில்லை என்பது தெரிகிறது. கேள் விஷயத்தை"

"பூலோகத்திலே—அதுவும் தெய்வ பக்தி மிகுந்த தென்னிந்தியாவிலே—கருஞ்சட்டைக்காரர்கள் என்ற ஒரு சாரார் நமக்கு விரோதமாகக் கிளம்பியிருக்கிறார்கள். அவர்களின் முதல் நோக்கம் தேவர்களையும் முனிவர்களையும் ஒழிப்பதாகும். இவர்களால் நமது சாஸ்திரிகளுக்கும், சர்மாக்களுக்கும், ஆழ்வார்களுக்கும், அய்யங்கார்களுக்கும், நாயன்மார்களுக்கும் முடிவாகக் கூறுகிறேன் பூதேவர் பரம்பரைக்கே மதிப்புக் குறைந்துகொண்டு வருகிறது. இந்தக் கருஞ்சட்டையினரின் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. இந்தக்கூட்டம் அதிகரிக்க அதிகரிக்க நமக்கு அழிவு காலம்மிகமிக நெருங்கிக்கொண்டு வருகிறது என்று தான் அர்த்தம். நமக்கே எமனாகவும் வந்துவிடுவார்கள் போல இருக்கிறது. நாம் நமது எம தூதர்களை அனுப்பிப் பாசக்கயிறு போட்டு அவர்கள் உயிரைப் பிடித்துக்கொண்டு வருவதைத் தடுத்து, இனி அவர்கள் தங்கள் ஆட்களை இங்கு அனுப்பி நம் மீது பாசக்கயிறு போட்டு நம்உயிர்களைப் பிடித்துக்கொண்டுபோக முயற்சிக்கிறார்களாம். இதற்காகப்பாசக்கயிறு திரிப்பதற்கென்றே தனியாகவே ஒரு 'மில்லையும்' நடத்துகிறார்கள். அதிலே தினம் ஒன்றுக்குக் கோடிக்கணக்கான கெஜமுள்ள பாசக்கயிறுகள் தயாராகிறதாம். இனிக்கூடிய சீக்கிரத்தில் தேவலோகத்தைப் பூலோகமாகவும் பூலோகத்தைத் தேவலோகமாகவும் மாற்றி விடுவார்கள்போல இருக்கிறது.

தேவ தேவா! இவைகளையெல்லாம் நானே நேரில் பார்த்தேன். பார்த்ததும் என்னையறியாமலேயே எனக்கு ஒருவிதப் பயம் உண்டாயிற்று. இவ்வாபத்திலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ளவே இச் சபையைக் கூட்டி ஒரு முகமாகப் பேசி, ஒரு முடிவுக்கு வர இதைக் கூட்டச்செய்தேன். பூலோகத்திலே உள்ள கருஞ்சட்டையினரைக்கண்டு பயந்து அவர்களிடமிருந்து, தப்பிக்க ஒரு வழியைக் கண்டு பிடிக்க இச்சபையைக் கூட்டச்

செய்தால் மானங்கெட்ட விபீஷணர் இங்கேயும் கருப்புத்துணியை மேல் துண்டாகப் போட்டுக்கொண்டு வருகி றார். கருப்பு உடையின் ரகசியம் எனக்குத் தெரியாது போலும். இவர் எப்படியோ கருஞ்சட்டையினரோடு நம்மை யெல்லாம் காட்டிக்கொடுக்கத் தொடர்புவைத்துக்கொண்டிருக்கிறார்.

சே! அப்படியெல்லாம் இருக்காது என்கிறீர்களா? அண்ணனையே காட் டிக் கொடுத்தவன் நம்மைக் காட்டிக் கொடுக்கக் கேட்கவா வேண்டும்?என்று கூறி ஒரு பெருமூச்சு விட்டார்!

நாரதர் கூறிய அனைத்தையும் மவு னமாகக் கேட்டுக் கொண்டிருந்த இந் திரன் சற்று நேரம் எதைப்பற்றியோ யோசித்துவிட்டு,

“என்ன நாரதரே! நீர் சொல்வதை நம்பமுடியவில்லையே. அரக்கர்கள் துன்பம் ஒழிந்தது என்றால் மனிதர் களுமாநம்மை எதிர்க்க ஆரம்பித்து விட்டார்கள்” என்றான்.

அப்பொழுது, அங்குமனதிலே பொங் கும் மகிழ்ச்சி முகத்திலே தாண்டவ மாட நடந்த சம்பவங்களை அமைதியு டன் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் இருந்த ஒரு தாடிக் கிழவர் ஆம்— உலகத்தை இரண்டு அடியால் அளந்த திருவள்ளுவர் எழுந்து,

“இந்திரா! நாரதர் சொல்வது உண் மைதான். திராவிட மக்கள் உங்கள் பெயரைக் கேட்கும்போதே முகம் சுளிப்பதும் உண்மைதான். ஆனால் அம்மக்கள் உங்களை அடியோடு வெறுப்பதற்கும் காரணம் இருக்கி றது”.என்றுகூறி ஒரு புன்னகை புரிந் தார்.

“ஸ்வாமி, உங்களுக்குக் கூட இந்த விஷயம் தெரியுமா? என் அவர்கள் எங்களை வெறுக்கிறார்கள்?”

“ஏனா? அவர்கள் நாடுதான் இதற்குக்காரணம். பண்டையத் திரா விடம் எந்த நிலையிலிருந்தது? இன் றையத் திராவிடம் எந்த நிலையில் இருக்கிறது என்பது உனக்குத் தெரியுமா?

“தெரியும் ஸ்வாமி. அந்தநாட்டைப் பல முறை நேரில்கூடப் பார்த்திருக்கி றேன். உழைப்பாளி மக்களையும் உண்மைத் திராவிடர்களையும் கொண் டதாயிருந்தது. வீரம் நிறைந்த ஆர ணங்குகளையும் வீழ்ச்சியை அறியா மக்களையும் கொண்டதாயிருந்தது. தன்நம்பிக்கையையும் தளரா ஊக்கத் தையும் உடையவர்களைக் கொண்ட தாயிருந்தது. ஒன்றேகுலமும்ஒருவனே தேவனும் என்ற உயர் எண்ணத்தை உடையதாயிருந்தது. ஆனால், இன் றையத் திராவிடம் எவ்விதம் இருக்கி றது என்பது எனக்குத் தெரியாது ஸ்வாமி” என்றான்.

இந்திரா! இன்று, அந்த வீரம் நிறைந்த திராவிடம் இறந்து விட்டது. இன்றையத்திராவிடம் வெறும் நடைப் பிணத்தின் தோற்றம். ஆரிய அடிவரு டிகளையும் ஆண்மையற்றவர்களையும் இன்றைய மக்களாகக் கொண்டிருக் கிறது. மக்கள் தன் நம்பிக்கையையும் தளரா ஊக்கத்தையும் இழந்தனர். தன்நாடு, தன்மொழி, தன்இனம் என் பதை மறந்தனர். வீரம், காதல், செல் வம், கலை அனைத்தையும் மண் ணோடு மண்ணாக்கி விட்டனர். புராணம் என்னும் மதுவை உண்டு ஆரியத்தின் அணைப்பிலே அருந்துயில் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு ஜாதி, மதம் என்னும் வெண்சாமரை வீசப்படுகிறது. இந் திரா! என் ஒப்புயர்வற்ற தமிழகம், உலகிற்கு நாகரீகத்தைக் கற்றுக் கொடுத்த தமிழகம் இறந்து விட்டது” என்று கண்ணீர் விட்டார்.

“சுவாமி! இந்நிலையிலிருந்து மக் களைத் திருப்பி மீண்டும் பண்டைய நிலைக்குத் திராவிடத்தைக் கொண்டு செல்ல ஒருவரும் முயற்சிக்கவில் லையா?”

“முயற்சிக்கிறார்கள் இந்திரா! அவர் கள்தான் நாரதர் முன்பு சொன்ன பெரியார் ஈ. வே. ராவும் அவரைச் சேர்ந்த கருஞ்சட்டைத் தொண்டர்க ளும். அவர்களால் என் ஒப்புயர்வற்ற தமிழகம் எவ்வளவோ விழிப்படைந்து விட்டது. எதிர்காலத்திலே நடக்கப் போகும் ஆரிய-திராவிட போராட்டத் திற்கு-என்-மானத்தை மீட்கும் போருக்கு ஆயிரக்கணக்கான திராவிட வாலிபர்கள் ரத்தம் சிந்தத் தயாராயி ருக்கிறார்கள். ஆனால் அவர்களையும் சில ஆரிய அடிவருடிகள் எதிர்க்கிறார் கள் என்பதை நினைக்கும்போது நாம் ஏன் இந்த நன்றி கெட்ட தமிழகத் தில் பிறந்து தொலைத்தோம் என்று எண்ணத் தோன்றுகிறது” என்று கூறிவிட்டு

“இந்திரா!...........” என்றார்.

“ஏன் ஸ்வாமி.........?”

“நீ இன்றையத் திராவிட நாட்டை யும் அந்நாட்டு மக்களைப்பற்றியும் ஒன்றும் அறிந்து கொள்ளாமல் இருக் கிறாய். ஆனால்......... அவர்களிடம் உன்னைப்பற்றி ஆயிரக்கணக்கான ஆபாசக் கதைகள் உலவுகின்றன” என்றார்.

“என்ன? என்னைப்பற்றியா? தமிழ கத்தில் ஆபாசக் கதைகளா?” என்ன ஸ்வாமி! விளையாடுகிறீர்களா?” என்று வியப்போடும் கோபத்தோடும் .........கேட்டான்.

“ஆம், உண்மைதான் இந்திரா! அதிக ஆபாசமாகத்தான் உன்னைப் பற்றி எழுதி வைத்திருக்கிறார்கள். திராவிடர்கள், உங்களை அடியோடு ஒழிக்க வேண்டும் என்று கிளம்பியிருப் பதற்கும் இதுதான் காரணம். இவ்வ ளவு ஆபாசமானவர்களை நாம் கட வுள்களாக வணங்குவதா நியாயம் என் பதுதான் அவர்களின் முதல் கேள்வி”.

இதைக்கேட்டதும் தேவேந்திர னுக்குக் கோபத்தால் முகம் சிவந்தது. புருவத்தை நெற்றிக்கு உயர ஏற்றி னான்.

“சுவாமி! என்னைப்பற்றி யார் அவ் வளவு ஆபாசமாக எழுதி வைத்தது. எந்தவிதமானஆபாசத்தோடுஎன்னைச் சேர்த்து எழுதியிருக்கிறார்கள். சொல் லுங்கள் சீக்கிரம். அவர்கள் யாராயி னும் சரியே, வேலைதீர்த்து விடுகி றேன். தேவேந்திரனைத் தூற்றியவ னும் இந்த ஈரேழுபதினான்கு லோகத் திலும் உயிரோடு இருக்க முடியுமா? ................”

“தேவேந்திரா! கேள்; நீ கவுதம மாமுனிவரின் மனைவி அகலிகா தேவியைக் கவுதமர் உருவோடு சென்று கற்பழித்தாயென்றும்; இந்தச் சமயத்தில் கவுதமர் வர பூனை உருக் கொண்டு ஓடினாயென்றும் இதைக் கண்ட கவுதமர் உன் உடம்பு முழுவ தும் யோனிகளாக மாறும்படி சபித்தா ரென்றும் அகலிகா தேவியைக் கல் லாக மாறும்படி சாபமிட்டாரென்றும் ஒரு கதை அவர்களிடம் உலவுகிறதே தெரியுமா.................?”

என்றுகூறி முடிப்பதற்குள் பக்கத் திலே அமர்ந்திருந்த கவுதமர்

“அவ்விதம் எங்களைப் பற்றி இழி வாக எழுதியது எவன்? என்னைப் பற்றித் தூற்றியது மல்லாமல் என் மனைவி கற்புக்கரசியைப் பற்றியுமா அவ்விதம் எழுதி வைத்தான் சண்டா ளப்பயல். அவன் யார் என்று கூறு சீக்கிரம்”.

என்று சீறி எழுந்தார். கையில் வாளுடன், முகத்தில் கோபம் பொங்க.

உடனே, திருவள்ளுவர் நிதானமாக இங்கு நடைபெற்ற சம்பவங்களைப் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண் டும், நீண்ட தாடியுடன் மூலையில் உட்கார்ந்து கொண்டு திருட்டுவிழி விழித்துக் கொண்டிருக்கும் கம்பரைச் சுட்டிக்காட்டி,

“இதோ, ‘காமரசம்’ இயற்றிய புண்ணியாத்மா!” என்றார்.

இவர் சுட்டிக் காட்டி விரலை மடக்குவதற்குள் இந்திரன் கையில் வாளுடன் அவரை நோக்கிப் பாய்ந் தான்.

இதைக் கண்டகம்பர் நடுநடுங்கிப் பயத்தில் வெலவெலத்துப்போய்,

“அய்யோ, நா...ன்...எ...ழு...த... வி...ல்...லை. இ...வ...ர்...தா...ன் மு...த...லி...ல்... எ...ழு...தி... னார்” என்றார் பக்கத்திலிருந்த வால் மீகியைக் காட்டி.

“யார் முதலில் எழுதியிருந்தாலும் சரி; இனி உங்களுக்கு இங்கேவேலை யில்லை!” என்றுகூறிக் கொண்டே இருவரையும் கல்த்தா கொடுத்து வெளியே தள்ளினான்.

‘நாட்டைக் காட்டிக் கொடுத்த துரோகிகளா’ என்று திருவள்ளுவ ரின் வாய் முணுமுணுத்தது.

# எமது தீர்ப்பு

## முல்லைக்காடு-கவிதைகள்.

[பாரதிதாசன்]

விலை 12 அணா

கிடைக்குமிடம்: ஞாயிறு நூற்பதிப்பகம், புதுச்சேரி.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களால் முன்னர் எழுதப்பட்டு இதுவரை பலருக்குத் தெரியாமலிருக்கும் கவிதைகள் பலவற்றைத் தொகுத்து இயற்கைப் பகுதி, தமிழகப்பகுதி, காதற்பகுதி, நகைச்சுவைப் பகுதி, சிறுவர் பகுதி என்ற அய்ந்து பிரிவுகளின் கீழ் மொத்தம் 30 கவிதை வெளியிடப்பட்டுள்ளன. பல கவிதைகள் யாவரும் அறிந்த எளிய மெட்டுகளில் இயற்றப்பட்டுள்ளன. யாவருடைய கையிலும் கண்டிப்பாக இருக்க வேண்டிய ஒருநூல் என்பதைத் தவிர வேறு மதிப்புரை எதுவும் கூறத் தேவையில்லையென்றே கருதுகிறோம்.

## போர்வாள்—பொங்கல் மலர்.

விலை அணா எட்டு. கிடைக்குமிடம்: "போர்வாள்" நிலையம் பவழக்காரத் தெரு, சென்னை. 1.

குறைந்தவிலையில் இன்றையத்திராவிடத்தின் இணையற்ற மறுமலர்ச்சி எழுத்தாளர்களின் கட்டுரை, கதை, கவிதை ஆகிய சொல்லோவியங்களைக் கண்டு மகிழ ஒரு அரிய வாய்ப்பே இப்பொங்கல் மலர். அழகிய சில ஓவியங்களும் இடம்பெற்றுள்ளன. அனைவரும் வாங்கி நுகரத்தக்க மணமிக்க மலராக இது திகழ்கின்றது.

## கதம்பம்.

[வார வெளியீடு]

ஆசிரியர்: டாக்டர் என். பி. சாஸ்திரி

[இதழ் 0-4-0. ஆண்டுக்கு 13-0-0]

துறையூர்.

ஆகஸ்ட்டுத் தியாகிகள் காட்டிய வழியிலே நின்று தொண்டாற்றி ஏழைகளின் சுதந்திரத்திற்கு உழைப்பது கதம்பத்தின் நோக்கம். அந்த நோக்கத்தை வெளிப்படுத்தும் கட்டுரைகள் இம் முதல் மலரில் காணப்படுகின்றன. தமிழரின் நலத்திற்காக? இக் கதம்பத்தில் ஹிந்தி வகுப்பு தொடங்க இருப்பது குறிப்பிடத்தக்கது.

## போர் முரசு.

[வார வெளியீடு]

ஆசிரியர்: எம். கே. அண்ணாமலை.

[தனிப்பிரதி 0-1-6 ஆண்டுக்கு 5-0-0]

5. மாடசாமி நாடார் தெரு, சென்னை 21.

திராவிட இன எழுச்சிப் பாசறைக்குப் போர்முரசு கொட்ட முன் வந்திருக்கும் இவ்விதழ், திராவிடர் ஒவ்வொருவரும் உண்மையை உணர்ந்து உரிமையை அடையத் தன் குடிஅரசு நாட்டிற்கு வருகிற வரைக்கும் ஓயாது ஒலித்துக் கொண்டேயிருக்கும் என்று கூறிக்கொள்கிறது. திராவிடர்கள் மனமுவந்து வரவேற்கத்தானே செய்வார்கள்.






## வரப்பெற்றோம்.

### சிறுகதைகள்.

[ஆசிரியர் சி. என். அண்ணாதுரை எம். ஏ. வெளியிடுவோர் திராவிடப் பண்ணை. தெப்பக்குளம் திருச்சி. விலை ரூ. 1—0—0]

### கரும்பு.

மாதப் பத்திரிகை. ஆசிரியர் ந. மெ. தியாகராஜா. புதுக்கோட்டை. தனி இதழ் ஆறணா.

### காலண்டர்.

டாக்டர் மதுரம் அன் சன்ஸின் குருமருந்துச் சாலை. திருச்சினாப்பள்ளி.

## இரைச்சல் இல்லாத மோட்டார்.

இரைச்சல் ஏற்படாத மின்சார மோட்டார்கள் உற்பத்தி செய்வதில் கடந்த 50 ஆண்டுகளாகப் புகழ் பெற்றுள்ள லண்டன் தொழில் நிலையம் ஒன்று சமீபத்தில் ஒரு பொருட்காட்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது. மோட்டார் வேலை செய்யும் பொழுது உண்டாகும் இரைச்சலை அடக்குவது மிகவும் எளிதானது என்பதை வெளிநாட்டு வியாபாரிகளுக்குக் காண்பிப்பதற்காகப் பொருட்காட்சியில் ஒரே வகையான இரு மோட்டார்கள் பொருத்தப்பட்டிருந்தன. இவைகளில் ஒன்று வெகு வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. மற்றொன்று வேலை செய்யவில்லை.

இவ்விரண்டு மோட்டார்களுள் எது ஓடிக்கொண்டிருக்கிறதென்பதைக் கூற ஒருவராலும் முடியவில்லை.

Edited, Printed and Published by N. Kariyaradaswamy at the Tamilian Press 47, Gutenbery street, ERODE